பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை (26.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 303

# வன்னி மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைத் தாமதமின்றி வழங்கவும்

## அரசிடம் இணைத்தலைமை நாடுகள் வற்புறுத்து

நியூயோர்க், செப்ரெம்பர் 26

வன்னியில் யுத்தத்தில் சிக்கித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு வேண்டிய சகல உதவிகளும் தாமதமின்றி அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளன.

அங்கு நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து அவை மிகுந்த கரிசனை வெளியிட்டிருக்கின்றன.

இதேவேளை, இப்போதைய நெருக்கடி குறித்த இணைத்தலைமை நாடுகளின் நிலைப்பாட்டினைத் தெரிவிப்பதற்காக அந்நாடுகளின் பிரதிநிதிகள் சிலர், விடுதலைப்புலிகளுடன் தொடர்புகொண்டுள்ளனர்.

*நியூயோர்க்கில் நேற்று முன்தினம் கூடி இலங்கை நிலைமைகள் குறித்து இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் ஆராய்ந்தனர்.* (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை மீட்கும் நடவடிக்கையை படையினர் அடுத்த வாரம் ஆரம்பிப்பர்!

### இராணுவத் தளபதி தகவல்



கொழும்பு, செப்.26

பல ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி நகரை அரச படையினர் மிகவும் அண்மித்து விட்டனர். அடுத்த வாரம் அளவில் அந்த நகரத்தின் மீது முதலாவது தாக்குதலை தொடுக்க எதிர்பார்த்திருக்கிறோம்.

- இவ்வாறு இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இராணுவத்தளபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரண்டு வருடங்களாக நாம் திட்டமிட்டது போல் இராணுவ நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறோம்.

இதுவரை காலமும் திட்டமிட்டபடி இவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடுத்தவாரம் அளவில் கிளிநொச்சி நகர் மீது முதலாவது தாக்குதலை மேற்கொள்ள முடியும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதன்பின்னர் மிகுதி இடங்களை விமானப் படையின் தளபதி பொறுப்பேற்றுக் கொள்வார்.

அதன் பின்னர் யுத்தம் (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 2 லட்சம் மக்கள் மிக ஆபத்தான கட்டத்தில்!

### அபாயக்குரல் எழுப்புகின்றன ஐ.நா. அமைப்புக்கள்

கொழும்பு, செப். 26

வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 2 லட்சம் மக்கள் ஆபத்தான நிலையிலுள்ளனர் என ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் அபாயக் குரலெழுப்பியுள்ளன.

இலங்கையில் செயற்படும் ஐக்கிய நாடுகளினது முகவர் அமைப்புகளையும், முக்கிய அரச சார்பற்ற அமைப்புகளையும் ஒருங்கிணைக்கும் ஐ.நாவின் (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி, நாகர்கோவிலில் மோதல்

யாழ்ப்பாணம், செப்.26

கிளாலி மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஆங்காங்கே கடும் மோதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதல்களின் போது விடுதலைப்புலிகள் எட்டுப்பேர் கொல்லப்பட்டதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

மோதல்களின் போது விடுதலைப்புலிகளின் பிரதேசத் தலைவர்களில் ஒருவரான வரதன் என்பவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிலிருந்து கொழும்பு செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சிகண்டு வருகின்றது!

யாழ்ப்பாணம், செப்.26

கடந்த சுமார் ஒருவார காலத்திற்கு மேலாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்துள்ளது. கப்பல் மற்றும் விமானப் பயணங்களுக்குப் பதிவு செய்வோரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. (14ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழு முகாமில் சிப்பாய் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப்.25

ஊரெழு முகாமில் நேற்று மு.ப. 10.30 மணியளவில் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்த சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என பலாலி ஊடகத்துறைப் பொறுப்பாளர் மேஜர் விஜய சிங்க தெரிவித்தார்.

காயமடைந்த சிப்பாய் பலாலி ஆஸ்பத் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.உள்ளூராட்சி சபைத் தேர்தல் டிசெம்பர் மாதத்துக்குள் நடத்தப்படும்?

### ஆயத்த வேலைகள் செய்ய அறிவுறுத்து

கொழும்பு, செப். 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் நடைபெறும் என நம்பப்படுகிறது உள்ளூராட்சி சபைத் தேர்தலை டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் நடத்துவதற்கு ஏற்ற விதத்தில் அதற்கான ஆயத்த அலுவல்களைச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Lifeline

மீண்டும் வாழ்வோம்



Humanitarian Information For IDPs

சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது " மீண்டும் வாழ்வோம் ".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை குலசேகரம்**
(கிராம சேவையாளர், காரை மேற்கு J/40)
"சிவந்த மேனியுடன் சீர் செய்த கோலம் கொண்டு
மலர்ந்த முகத்துடன் மாண்புடன் பழகினீர்
நிலையில்லா வாழ்வில் நிழல் போல் மறைந்தீர்
ஈசனின் நிழலில் இன்பமாய் வாழ்வீர்"
(இ/554844)

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.
உதவி அரசாங்க அதிபரும், பணிமனை உத்தியோகத்தர்களும்.

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளைக் கழுவுதல் - ஆண்டு 2008-2009

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கேள்விச் சபைத் தலைவரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 2008-2009 ஆம் ஆண்டுக்கான அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்காக சீலிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட பொது 170 படிவத்தில் சொத்துச் சான்றிதழ் மற்றும் ரூபா 500 ஐ மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் செலுத்தி பெறப்பட்ட பொது 172 பற்றுச் சீட்டுடன் தமது அடையாள அட்டையையும் காண்பித்து 09.10.2008 பி.ப. 2 மணிவரை கேள்விப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. கேள்விகள் அடங்கிய தபால்கள் சீலிடப்பட்டு இடதுபக்க மேல்மூலையில் **"2008 - 2009 ஆம் ஆண்டுக்கான அழுக்குத் துணி கள் கழுவுதல்"** எனக் குறிப்பிட்டு **பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 10.10.2008 மு.ப. 10 மணி வரை அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ வைத்தியசாலை கேள்விப் பெட்டியில் இடலாம்.

3. கேள்விகள் 10.10.2008 அன்று 10 மணிக்கு வைத்தியசாலை அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளித்திருக்கலாம்.

4. கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணை அல்லது பெறுமதிமிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயருக்கு பணம் வைப்பிட்டு பெறப்படும் பற்றுச் சீட்டின் மூலப்பிரதி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் இணைத்திருத்தல் வேண்டும்.

5. மேலதிக விவரங்களுக்கு போதனா வைத்தியசாலைக் கணக்காளருடன் தொடர்பு கொள்ளவும்.

வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானஜோதி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்
திருலிங்கநாதன் அவர்களின் அன்புத் தந்தை
**இளங்சிங்கம் வேலுப்பிள்ளை நடராசா**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தி அவருடைய ஆன்மா நித்திய இளைப்பாறுதல் அடைய பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நிர்வாகக் குழுவினர்,
நெடுந்தீவு அபிவிருத்தி மையம், நெடுந்தீவு.

## கண்ணீர் அஞ்சலி



எமது உதவி அரசாங்க அதிபர்
திரு.ந.திருலிங்கநாதன் அவர்களின்
அன்புத்தந்தை
**அமரர் வேலுப்பிள்ளை நடராசா**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், மருதங்கேணி கிராம சபையின் முன்னாள் தலைவர்)

அவர்களின் பிரிவால் துயருற்றுள்ள அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர் சபை,
பணியாளர்.
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்.

## ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 14 ★ 09 ★ 1963



விண்ணில் 07 ★ 10 ★ 2007

**அமரர் மார்க்கண்டு செல்வராசா (வவி)**
திதி:- துவாதசி (26.09.2008)

பாரினில் நாம் கண்ட
எம் அன்புத் தெய்வமே!
எப்பிறவி வந்திடினும்
உம் உறவு வேண்டுமையா!

56/20, கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## உயிர் அச்சுறுத்தல்; இருவர் நேற்று சரண்

யாழ்ப்பாணம், செப்.26

சுன்னாகம், மட்டுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று சரண் அடைந்துள்ளனர்.

சுன்னாகம் மேற்கு, குண்டுக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையும் -

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவருமே நேற்று சரண் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்களைப் பாதுகாப்பாக தங்கவைக்க ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது. (1-25)

## வயாவிளானில் வீடு தீக்கிரை

தெல்லிப்பளை, செப்.26

வயாவிளான் கிழக்கு, ஜே/244 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் கடந்த புதன்கிழமை இரவு வீடு ஒன்று விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீடு, அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அப்பகுதியிலுள்ள மிக வறிய குடும்பம் ஒன்றுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது.

சம்பவ தினத்தன்று இந்த வீட்டிலுள்ளவர்கள் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தபடியால் உயிராபத்து ஏதும் நிகழவில்லை.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (1-150)

## பரிசளிப்பு விழா

கோப்பாய், செப்.26

ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் கு.சிவபாலனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், யாழ். மாநகர சபை படவரைஞர் எக்ஸ்.குலநாயகம், இப்பாடசாலை யின் ஓய்வு பெற்ற அதிபர் இ.குலசிங்கம், உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-72)

## இசை இறுவட்டு வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், செப்.26

யாழ். தேசிய கல்வியற் கல்லூரி வித்தக விநாயகர் பாமாலை நூல், இசை இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து மன்றக் காப்பாளர் மா.பிரபாகரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள்வார்.

## புலமைப் பரீட்சை முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியாகின

கடந்த மாதம் 17 ஆம் திகதி இடம் பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட பரீட்சை முடிவுகள் யாழ்.வலயத்திற்கு நேற்று முன்தினம் முற்பகல் எடுத்துவரப்பட்டன.

உடனடியாகவே சம்பந்தப்பட்ட வலயங்களுக்கு அனுப்பப்பட்டன. வலயங்களில் பரீட்சை முடிவுகளைபாடசாலை அதிபர்கள் நேற்றுப் பெற்றுக் கொண்டனர்.


### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களும் மற்றும் கனடா, இலண்டன் பிரஜா உரிமை உள்ள மணமக்களும் உண்டு. சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**துர்க்கா திருமண சேவை**
இல.09, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். தொ.பே:-0214591417
(787491)


### தவறிவிட்டது

மா.ரவிரதன் (C.T.B) ஆகிய எனது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் நெல்லியடிக்கும்-அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மா.ரவிரதன் (C.T.B)
[illegible] 683

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 08 ★ 02 ★ 1978



உதிர்வு 07 ★ 10 ★ 2007

**அமரர் பாலசிங்கம் நகுலேஸ்வரன்**
(சின்னக்கண்ணன்)

புன்னகையுடன் அன்பாகப் பார்க்கின்ற
அந்த பூ முகம்தான் எமைவிட்டு
அகன்றிடுமோ? எம் அனைவர்
உள்ளங்களிலும் அணையாத தீபமாய்
விளங்கிடும் உம் ஆத்மா
சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இளையதம்பி மயில்வாகனம்**
(லொறி உரிமையாளர்)

பத்தாண்டு சென்றது அப்பா!
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன?
உங்கள் அன்டைப்போல் வருமா!
பாரினில் நாங்கள் பாங்குடன் வாழ
பாசத்துடன் எம்மை வழிநடத்தினீர்கள்
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எம்மைவிட்டு நீங்காது அப்பா.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
தகவல்:
மதுசா (பேர்த்தி).

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு சுரேந்திரன் (இளைப்பாறிய நீதிபதி)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 859/21, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சுரேந்திரன் நேற்று (25.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுரு பாக்கியரெட்ணம் தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி தம்பித்துரை (இளைப்பாறிய நீதிபதி) அவர்களின் அன்பு மருமகனும், றூபா சுரேந்திரன் (மனித உரிமை ஆணைக் குழு, கொழும்பு) அவர்களின் அன்புக் கணவரும், செல்வி ராதிகா (சட்டக்கல்லூரி, லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், DR.நரேந்திரன் (U.K), தர்மேந்திரன் (தொழில்நுட்பவியலாளர், கனடா), பேராசிரியர் மகேந்திரன் (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), திருமதி ஜானகி முரளி (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2008) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

859/21, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
லீலா நல்லதம்பி (சிறிய தாய்).

### கணபதிப்பிள்ளை குலசேகரம்

(கிராம சேவகர், காரைநகர் மேற்கு J/40)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குலசேகரம் நேற்று (25.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தீஸ்வரன் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், வரலட்சுமியின் அன்புக் கணவரும், சுமங்கலை (யூனியன் வங்கி, கொழும்பு), நிதர்சனா (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணப்பிள்ளை, இராஜசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம், நவரத்தினம், திலகவதியார், விநாயகமூர்த்தி, குணரட்ணம், சிவநேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலேந்திரரா, சந்திரவதனா, செந்திலரசி, செந்தில்மல்லிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பும் இரத்ததான முகாமும் இன்று

யாழ்ப்பாணம்,செப்.26

கோண்டாவில் பொது அமைப்புகளும், இணுவில் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் குருதிக் கொடையாளர் கௌரவிப்பும், இரத்ததான முகாமும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

சமூக நோக்கத்தோடு தாமாக முன்வந்து இரத்ததானம் செய்த தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் முகமாகவே இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (60)

## கண் பார்வையற்றவர்களுக்கு விசேட கணனிப் பயிற்சி

நாவற்குழி,செப்.26

யாழ்.மாவட்டத்திலுள்ள பார்வையற்றவர்களுக்கென விசேட கணனிப் பயிற்சி நெறி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

சமூக நலத்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'நிக்கொட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இப் பயிற்சி வழங்கப் படுகின்றது.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் வார் இறுதி நாள்களில் இவ் வகுப்பு நடத்தப் படுகின்றது.

முதற்கட்டமாக 17 பேர் பயிற்சியில் இணைந்து கொண்டுள்ளனர். (202-288)

### சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில்

## கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப் படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

கே.அகிலன் (மட்டுவில் வடக்கு), ஆர்.ரஜிதா (மீசாலை வடக்கு), ஏ.ஜெயப்பிரியா (கைதடி), எஸ்.ரமீஸ் (கொடிகாமம்), ரி.கானமூர்த்தி (வேம்பிராய், கொடிகாமம்), கே.ஜனகன் (கச்சாய் வீதி, கொடிகாமம்), ரி.தயானந்தி (மட்டுவில் தெற்கு), கே.முல்லைமாறன் (மட்டுவில் தெற்கு), வி.லோகேஸ் (தனங்கிளப்பு), ஏ.அஞ்சுதன் (கைதடி கிழக்கு)

வை.கார்த்திகா (கொடிகாமம்), என்.தியாகர் (நாவற்குழி தெற்கு), ஏ.முகுந்தன் (மட்டுவில் தெற்கு), கே.தர்மேந்திரா (சாவகச்சேரி), எஸ்.மதியழகன்(மீசாலை வடக்கு), ஐ.கலையரசி (பாலாவிவடக்கு), ஆர்.நிரஞ்சன்(சாவகச்சேரி), எஸ்.மயூரா (கொடிகாமம்), எம்.தீபா(இயற்றாலை, கொடிகாமம்), என்.அஜந்தி(சாவகச்சேரி)

ரி.சுரேஸ் (சாவகச்சேரி), ஐ.சிவாஜினி (கைதடி தெற்கு, கைதடி), எஸ்.மதனன் (மீசாலை வடக்கு), ஆர்.இராஜசுதாகர் (மீசாலை மேற்கு), எஸ்.உமாஜோதினி (கற்குளி), கே.கேதீஸ்வரன் (மந்துவில் வடக்கு), எம்.அமலதீசன் (மந்துவில் கிழக்கு), எஸ்.சிவசர்மினி (மட்டுவில் கிழக்கு), கே.காயத்திரி (சாவகச் சேரி வடக்கு), பி.அகல்யா (கைதடி தெற்கு), கே.சதீசன் (மட்டுவில் வடக்கு)

என்.சுபோஜனா (சாவகச்சேரி), ஜெ.சசிலா (மீசாலை மேற்கு), என்.கே.சன்சயன் (நுணாவில் கிழக்கு), ஜி.கிருபாதீசன் (கைதடி மேற்கு), கே.மதிவதனன் (உசன் மிருசுவில்), வி.துபிலன் (கைதடி மேற்கு), கே.கார்த்திகேயன் (அல்லாரை வடக்கு), எஸ்.சிவதாசன் (கல்வயல்), வி.சசிரேகா (கைதடி வடக்கு), எஸ்.ஜசிந்தன் (மட்டுவில் தெற்கு)

ஏ.பிரதீபன் (கரம்பைக்குறிச்சி), எஸ்.குமாரதாஸ் (மறவன்புலோ), வி.ரவீந்திரன் (மட்டுவில் கிழக்கு), என்.கௌபீதரன் (சங்கத்தானை), பி.மகாலிங்கம் (மருதங்குளம்), வி.பகீரதன் (கைதடி தெற்கு), பி.நிமால் (மீசாலை தெற்கு), பி.பவித்திரா (நாவற்குழி, கைதடி), எஸ்.சாருமதி (தச்சன் தோப்பூர், கைதடி), கே.சிவகுமாரசர்மா (கைதடி வடக்கு), கே.மகிந்தன் (கணேசபுரம், கிளிநொச்சி)

## விஸ்தரிப்புப் பணிகள் பூர்த்தியாகி நீண்ட காலமாகியும் மின் இணைப்புகள் இதுவரை வழங்கப்படவில்லை

### கைதடி மேற்கு மக்கள் முறைப்பாடு

நாவற்குழி, செப்.26

கைதடி மேற்கு நேவத்தைப் பகுதியில் மின் இணைப்புக்கென விஸ்தரிப்புப் பணிகள் பூர்த்தியடைந்து நீண்டகாலமாகியும் மின் இணைப்பு இதுவரை வழங்கப் படவில்லை என பிரதேச மக்கள் முறைப் பாடு தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தின் மின் இணைப்புக்கான மின் கம்பங்கள் கடந்த இரு வருடங்களுக்கு முன்பாக நாட்டப்பட்டு மின் கேபிள்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பொருத்தப்பட்டது.

திருத்த வேலைகள் முழுமையாக முடிவுற்ற போதிலும் மின்சாரம் வழங்க மின்சார சபையினர் பின்னடித்து வருகின்றனர் எனவும் மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

எழுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதியில் வசித்து வருவதனால் அவர்களின் நலன் கருதியும் அப்பகுதி மாணவர்களின் நலன் கருதியும் இப்பகுதிக்கான மின்சாரத்தினை உடன் வழங்க மின்சார சபையினர் ஆவன செய்ய வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (202-288)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

கடந்த மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிய முடிவுகள் வருமாறு:-

*உடுவில் மகளிர் கல்லூரி*

டிலக்ஸ்வரன் நிர்மலேஸ்வரன் - 156, கிருஷ்ணமேனன் ராசேந்திரா - 148, செந்துஜன் அருந்தவராஜா - 145, சிறிபானுஜா - 143, வஜீகரன் யோகலிங்கம் - 143, கேதீசா தனஞ்சயன் - 140, அருண்யா கிருஷ்ணமூர்த்தி - 137, காயத்திரி மகேந்திரா -137, சிறிகஜன் பாலகுமார் - 137, ஆருண் விஜய கிருஷ்ணன் - 136,

பிரியங்கன் திருலிங்கன் - 135, பொன் மகள் வலேதஞ்சன் - 134, கோகுலன் ராசேந்திரன் - 134, துவாரகன் துஷ்யந்தன் - 133, கிறிஸ்ரின் தேவமிர்த தயாபரன் - 132, அனுராகவன் ராஜா -132, காயத்திரி சிவகுமார் - 131, தனுஜன் ஜெயபால சிங்கம்- 131, திவியா சிவ நேசன் - 131, நிதுர்ஜினி விக்னேஸ்வரன் - 130,

அச்சுதன் சர்வானந்தா - 130, கஜன்சிகா இந்திரசேனா - 130, சிவப்பிரியா சிவலிங்கம் - 128, சதுர்கஸ்தன் திருச்செல்வம் -128, கண்ணன் கணேஸ் வரதலிங்கம் - 127, ரிஷிகேசன் நாகராஜா - 127, அட்சயா உதயகுமார் - 126, கீர்த்தனன் பாஸ்கரன்- 126 கஜன்சிகா சிவலோகநாதன் - 125, ரிகாசன் சிறிறஞ்சன் - 124,

இறசன் தங்கவேல் - 123, ரவிவர்மன் அருமைகிளி - 123, சிந்துஜன் ஆனந்தராஜா - 122, சானுகன் மைக்கேல் யூட் - 122, பபிகரன் செல்வநாயகம் - 122, வேடன்சன் சுந்தரமூர்த்தி - 121, பாலகிருஷாந் பாலச்சந்திரன் - 120, வர்ஷனன் சிவசுந்தரம் - 120, யாதவி ரமேஸ்வரன் - 119, சிவானிகா ராஜேந்திரம் - 119,

வித்தகன் கணேசகுமார் - 118, துஷாகரன் ராகவன் - 118, கலைமகள் கணேசலிங்கம் - 118, வினுஜா பிராபாகரன் - 117, துளசிராம் பகீரதன் - 115, யதுபிரியா கதிர்காமநாதன் 114

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

வி.பாவோதயன் - 157, எஸ்.தசரத் -148, பி.அக்ஷை - 146, எஸ்.அஜித் டானியல் - 141, ஆர்.கிருஷாந் - 137, ரி.ஜெவ்றி வொட்சன் - 137, என்.சிவதர்சன் - 136, பி.ஆனந்த சாயி - 133, ரி.அகுலப்பிரியன் - 131, ஈ. பிரவீன் ராஜ் - 130, வி.ஷேன்ஜோயல் - 130, எஸ்.ஜெகுடிலக்சன் - 129, எஸ்.யாதவன் - 128, எஸ்.எவ்.கலிஸ்ரஸ் டானியல் -127, என்.கசான் - 124, ஈ.வினோதவன் - 124, எம்.சரோன் ஸ்ரீபன் - 115, என்.சிவாம்சன் - 114

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

க.மதுராந்தா - 148, வ.கிரிஷிகா - 120, ஸ்ரீ.கம்சன் - 119, ச.அர்ச்சனா - 118, இ.மகிந்தன் -114.

**வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி**

க.கந்தசொரூபன்-128, பு.குவிஸ்சன்-128, தி.கீர்த்தனா-126, சி.விதுர்சன்-121, த.துஷாளினி-116,

**வட்டுக்கோட்டை சுப்பிரமணியம் வித்தியாசாலை**

இரத்தினதாசன் ரூபலக்ஷ்மன்-114

**புன்னாலைக் கட்டுவன் அ.த.க.பா**

பாலசிங்கம் ஜெயசதன் - 145, இராசரத்தினம் பிறேமரூபன் - 127, தனேஸ்வரன்யதுர்சன் - 119, பானுசா சின்னராசா -115

**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**

இ.திலக்ஷனா - 144, செ.ஜெயனிசா - 127, அ.நிஷாலினி - 121

**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**

பா.ஹரிப்பிரசாத் - 122

**கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை**

ஜெ.ஜெனீவன் - 133, த.மிகிலா - 123, ப.வினித் - 117, த.குருபரன் - 116

**நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை**

சாந்தகுமார் யதுகுலன் - 117, சிவாஸ்கரன் துர்க்கா - 114

## ஆரம்பக்கல்வி தொடர்பான கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம்,செப்.26

ஆரம்பக்கல்வி தொடர்பான கற்றல், கற்பித்தல், செயல்நிலைக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கண்காட்சியை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கவுள்ளார். (302-60)

## சாவகச்சேரியில் பல்வேறு இடங்களில் விபத்து; சிறுமி, பெண் உட்பட ஏழுபேர் காயம்

சாவகச்சேரிப் பகுதியில் புதன்கிழமை நண் பகல் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற வீதி விபத்துக்களில் சிறுமி, பெண் உட்பட ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் சிறுமி உட்பட இருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏனையோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

வாகனத் தொடரணி சென்ற வேளையில் மூடப்பட்ட வீதிகள் திறக்கப்பட்டபோது அவசர அவசரமாக தமது கருமங்களுக்குச் சென்றவர்களே வீதி விபத்துக்களில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் சங்கத்தானையைச் சேர்ந்த ஜெ.சிவநாதன் (வயது 40) இவரது மகளான சிவநாதன் சினேகா (வயது 6) அல்லாரை வடக்கைச் சேர்ந்த முத்துச்சாமி சிவலிங்கமூர்த்தி ஆகியோர் காயமடைந்தனர்.

சி.சினேகா, மு.சிவலிங்கமூர்த்தி ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-மிதிவண்டி விபத்தில் சாவகச்சேரி அஞ்சல்நிலைய உத்தியோகத்தர் ஜெ.நளாயினி (வயது 37) என்பவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் காயமடைந்தனர்.

கல்வயல் பகுதியில் வீதியைக் கடந்து சென்ற மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதியதில் தூக்கி வீசப் பட்ட எஸ்.விஜயகுமார் (வயது 46) என்பவரும் டச்சு வீதியில் இரு மிதி வண்டிகள் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் வரணியைச் சேர்ந்த கே.நாகேஸ்வரன் (வயது 32) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-207)

## 'மனிதத்துடன் வாழ்வோம்'

*''அரிது அரிது மானிடராதல் அரிது''*

*என்பது ஔவையாரின் அருள்வாக்கு-*

''மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மானிலத்தே'' என நாவுக்கரசர் நல்வாக்கு எடுத்துக் கூறுகிறது-

தொல்காப்பியம், 'மக்கள் தாமே ஆறறிவினவே' எனப் பகிர்கின்றது.

எனவே, இத்தகைய ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் இன்று மனிதனுக்குரிய மாண்பினை மறந்து தூர விலகி நிற்கின்றோம். மனிதனாக பிறந்தால் மட்டும் போதாது மனிதத்தின் இலட்சியங்கள், கோட்பாடுகளை கடைப்பிடித்து வாழ வேண்டும்.

சமயங்கள் யாவும் மனிதன்து வாழும் நெறிகளையும், உயர்ந்த இலட்சியங்களையும் எடுத்துக் கூறுகின்றன. அன்பு, மனிதநேயம், இலட்சியவாழ்வு, சகிப்புத்தன்மை, நன்றி மறவாமை, அறநெறி வாழ்தல், தாங்கள் சார்ந்த மதங்களின் விழுமியங்களை ஒழுங்கான வகையில் கடைப்பிடித்தல், நமது கலாசாரத்தைப் பாதுகாத்தல் என்பவை முக்கிய கடமைகளாகும். வேறு, வேறு மதம், வேற்றுக் கொள்கைகள் இருப்பினும் அவற்றை மறந்து வேற்றுமையில் ஒற்றுமைகாண முன்வர வேண்டியதவசியம். வள்ளுவப் பெருந்தகை ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்காண நன்னயம் செய்து விடல்'' என்றார்.




இயேசு கிறிஸ்து நாதர் ''ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு'' என்றார்.

அவர்கள் இலட்சியம் மனித குலத்தை வாழ்வித்தது. இன்றும் வாழ்விக்கின்றது. தெய்வ அவதாரங்களான நாயன்மார்கள் ,மகாத்மாகாந்தி, புத்த பகவான், கிறிஸ்து நாதர் அனைவரும் மனிதகுலம், மனிதநேயத்துடன் சுதந்திரமாக வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து பரநலம்பேணி வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தேவர்கள் ஆனார்கள்.

பின்னர் வந்த நாவலர், சேர்.பொன் இராமநாதன் போன்ற பல பெரியோர்கள் செய்த சமூக சேவைகளால் மனிதம் உயர்ந்தது.

எனவே சாதாரண மனிதர்களாகிய நாம் முன்னோர் கற்றுத் தந்த நெறி முறைகளை ஒழுகி வாழ்வு வாழ்ந்து வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வோமாக.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள். (கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



பிரிட்னி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபன் - ஜென்சி தம்பதியரின் செல்வப்புதல்வி **பிரிட்னி** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.09.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்பம்மா, பூட்டி, பூட்டன், அத்தைமார், மாமாமார், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மரி அன்னையின் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடு வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: செ.இராசநாயகம் (அப்பப்பா).
189, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகம்

யாழ்ப்பாணம், செப் 26

புங்குடுதீவு கமநல நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களம் சி.ஐ.சி விதை நெல்லை கேந்திர நிலையத்தில் வைத்து கடந்த செவ் வாய்க்கிழமை விநியோகித்துள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கே வழங்கப்பட்டது.

விவசாய போதனாசிரியர் பி.பத்மநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெயகாந்தன் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் 2008ஆம் ஆண்டு 5ஆம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் 146புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

**தில்லைநாதன் கிரிபரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர்கள்:
**புஸ்பராசா சித்தப்பா, சித்தி, தம்பி.**

கோவளம், காரைநகர். (78759)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்

செல்வன் **சுதாகர் சிவசாந்த்**

மேலும் பல புலமைப் பரிசில்கள் பெற்று மேதையாகி சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

[78755]

582, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
**அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பம்மா, அம்மம்மா, மாமாமார் குடும்பம், பெரியமாமா, பெரியத்தை, மச்சான்மார், அப்பா, அம்மா, அக்கா, தம்பி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.கன்னாதிட்டியில் வசிக்கும் **சந்திரசேகரன் மல்லிகா** தம்பதியரின் செல்வப் புதல்வன் **நிவேனுதன்** யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைய ஊக்கமளித்து கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்து இவர் பல்கலைகளிலும் மேன்மை பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(78752)

வாழ்த்துவோர்:
வே.மகேந்திரன் குடும்பம் (மாமா),
எஸ்.தர்மராஜா (பெரியப்பா),
ஆர்.செல்வச்சந்திரன் (சித்தப்பா).

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தின் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட

யா/புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனும் ஜெயராஜன் சிசிலியா தம்பதியரின் செல்வப் புதல்வனுமான

**ஜெயராஜன் போல் ஜான்சனைப்** பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேன்மேலும் கல்வியில் உயர பரிசுத்த கொஞ்சஞ்சி மாதாவின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

115, புனித பத்திரிசியார் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
**புஸ்பாம்** (அன்ரி),
**ரஜீத்** (அண்ணா),
**நிஷா** (அக்கா),
**சதீஸ்** (அண்ணா)

(78757)

## யாழ்.மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை

யாழ்.மத்தியகல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.அருள்வேல் கலந்துகொள்வார். (202)

## நாளை அறிமுகமாகும் இரண்டு நூல்கள்

யாழ்ப்பாணம், செப். 26

அலுவலக முகாமைத்துவம், அரச அலுவலகதாபன நடைமுறை ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக விழா நாளை சனிக்கிழமை பி.ப 5 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் வினைத்திறன் தகுதிப் பரீட்சைக்கும், பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கும் பயனளிக்கும் விதமாக கணக்காளர் அ.இராசநாயகம் அவர்களால் எழுதப்பட்ட இந்த நூல்கள் ஜே. ஆர் திறன் வெளியீட்டு நிறுவனத்தினரால் வெளியீடு செய்யப்படவுள்ளன. (60)

## கண் பரிசோதனை முகாம்

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு பிரதேச மக்களின் நலன்கருதி இக்கண் பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (202)

## வாராந்த நிகழ்வுகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி கோவில் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பிரதி வெள்ளி தோறும் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''மேன்மை கொள் சைவ நீதி'' என்னும் தலைப்பில் சுழிபுரம் வித்தியாலய ஆசிரியர் அ.கைலைநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-236)

* * *

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் சுற்றாடலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்னும் பொருளில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய ஜி.சீ.ஈ உயர்தர கலைப்பிரிவு மாணவன் செல்வன் த.தவநேசன் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-236)

* * *

கோண்டாவில் கிழக்கு, நாராயணன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீகசபாவில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் ஆத்மீக நிகழ்வு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெறும்.

மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில் வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து ... தேவானந்தாவின் பகவத்கீதை உபன்னியாசம் இடம்பெறும். (236)

## மனம் நிறைந்த வாழ்த்துகள்



எமது பாடசாலை அணிகளான 17 வயதுக்குக் கீழ் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகள் மாகாண மட்டத்தில் 1ஆம், 2ஆம் இடங்களையும் உதைபந்தாட்ட அணி தேசியமட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொள்வதற்கு பேருதவி புரிந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்குப் பிரயாண அனுமதிகளைப் பெற்றுத் தந்துதவிய மதிப்பிற்குரிய அரச அதிபர்

**திரு.கே.கணேஷ்** அவர்களுக்கும் எமது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.**

(ச/554835)

## கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் வளர்ச்சி நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. 31.10.2008 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின் றோம்.

**சி.சத்தியசீலன்,**
தலைவர்,
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

**வீ.க.சண்முகநாதன்,**
செயலாளர்,
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

[க/554829]

## மரண அறிவித்தல்

### முத்துச்சாமிக்குருக்கள் சிவசுப்பிரமணிய சர்மா

பத்தமேனியைப்பிறப்பிடமாகவும், கோயில் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் பத்தமேனி மிட்டிலாங்கூடல் சித்தி விநாயகர் ஆலயம், கதிரிப்பாய் சுப்பிரமணிய ஆலயம், பத்தமேனி ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றின் பிரதம குருவாகிய முத்துச்சாமிக் குருக்கள் சிவசுப்பிரமணிய சர்மா அவர்கள் நேற்று (25.09.2008) வியாழக்கிழமை அதிகாலை 5 மணி அளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமிக் குருக்கள்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவக் குருக்கள்- புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், கமலாதேவி, ஜெயபால சர்மா (இலங்கை மின்சாரசபை), சுலோஜனாதேவி, பத்மாதேவி, சிவபால சர்மா (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), ஜெயதேவி ஆகி யோரின் அன்புத் தந்தையும் குமாரசதாசிவ சர்மா, சுவாமிநாதக் குருக்கள், கமல ராஜக் குருக்கள், மோகன கிருஷ்ண சர்மா, செண்பகவல்லி, மீனலோஜனி ஆகியோரின் அன்பு மாமனும், பாலரூபன், திவாகரன், சக்தீதரன், பிரவீணா, தரணுஜா, சிந்துஜா, சுமணஜா, சிவாத் மஜன் ஸ்ரீவத்ஸசர்மா, விஷ்வாதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2008) காலை 9 மணிக்கு 93, கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தமேனி தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

95, கோயில் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6407.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(78758)

## 6ஆம் ஆண்டு நினைவுகளுடன்



**அமரர் தம்பையா இலங்கைநாதன்**
(ஓய்வுபெற்ற அதிபர், கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்)

**தம்பையா மாணிக்கத்தின் ஏக புதல்வனாய்**
**மணித்தீபத்தின் ஒளிவிளக்காய்**
**மணிபல்லவத்தின் வழிகாட்டியாய்**
**கணேசாவின் கலை ஆசானாய்**
**கடமையால் உயர்ந்த அதிபராய்**
**எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்**
**ஒளிவீசி அணைந்த அன்புத் தந்தையே!**
**நீங்கள் என்றும் எமக்கு அணையாத் தீபம்தான்.**

தங்கள் ஆத்மா சாந்திபெற அம்பிகைதாள் வேண்டுகின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

(78756)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைபாடுகளுக்கு மத்தியிலும் மாணவரின் குறைதீர்க்கும் அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம்


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம் பின்தங்கிய கிராமத்தில் காணப்படுகின்ற போதிலும் மாணவர்கள் உள்ள வளத்தைப் பயன்படுத்தி தமது திறன்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள். இந்த வருடம் தான் முதற் தடவையாக 14, 16 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியினர் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்கள்.

14 வயதுப் பிரிவு அணியினர் 3ஆம் இடத்தைக் கோட்ட மட்டத்தில் பெற்று வலய மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளார்கள்.

பாடசாலையைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது.

வட்டுக்கோட்டை - அராலி வீதியில்




இருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் மேற்குப் புறமாக செல்லும் வீதியில் போக்குவரத்து வசதிகள் அற்ற பாதையில் அமைந்துள்ளது இப்பாடசாலை:

இப்பாடசாலையின் அதிபர் கனகநாயகம் ஹரிகரசக்தி பாடசாலை பற்றிக் கூறியதாவது:

1930ஆம் ஆண்டு சி.சுப்பிரமணியம் என்பவர் தனது துணைவியான திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மையின் பெயரில் இப்பாடசாலையை 22 மாணவர்களுடன் ஆரம்பித்தார்.

1962ஆம் ஆண்டு அரசின் கொள்கைக்கு ஏற்ப இப்பாடசாலையும் அரசினால் கையேற்கப்பட்டு அரச பாடசாலையாகத் தொடர்ந்து கலவன் பாடசாலையாக இயங்கி வருகின்றது. 78 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள நிலையிலும் இன்றும் பழைய கட்டடத் தொகுதியை நம்பியே பல வகுப்புகள் இடம் பெற்று வருகின்றன.

தரம் ஒன்று முதல் தரம் 10 வரையான வகுப்புகளில் 334 மாணவர்களைக் கொண்டு இயங்கிவரும் இப்பாடசாலையின் அதிபருடன் 16 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்.

மாணவர்களின் போக்குவரத்து மற்றும் இடைவிலகல் போன்ற காரணங்களினால் இவ்வாண்டு தரம் 10 இற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்தாண்டு தரம் 11 இற்கான வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான அனுமதியைக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குக் கடந்த ஆண்டு 24 மாணவர்கள் தோற்றினார்கள். இந்த ஆண்டு 27 மாணவர்கள் தோற்றியுள்ளார்கள்.

பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் சராசரியான நிலைமையே காணப்படுகின்றது. ஆசிரியர் குழாம் இம்மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டில் அதிக அக்கறை காட்டி கற்பித்து வருகின்றார்கள்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் மிகவும் வறுமையானவர்கள். தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் அதிகளவு கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

பாதுகாப்பான வீடுகள், பாதுகாப்பான குடிதண்ணீர் வசதிகள், நிரந்தர வருமானம் எதுவுமின்றி வாழ்கின்ற இடைத்தங்கல் வாழ்க்கை முறையே இந்தப் பாடசாலை மாணவர்களின் குடும்பசூழல் முறையாகும்.

சுகாதார முறைகளைச் சிறந்த முறையில் பின்பற்ற நீர்வசதி கூட இல்லை என்றார் அதிபர்.

பொதுநிறுவனங்கள், பாடசாலை அமைந்துள்ள சமூக சூழலின் மேம்பாட்டில். அதிக கவனம் எடுக்கவேண்டியுள்ளது.

பழைய கட்டடத் தொகுதியில் தற்காலிக அடைப்புகளை ஏற்படுத்தி வகுப்பறைகள் மிகவும் நெருக்கமாக உள்ளன. பாடசாலைக்கு உடனடியாகக் கட்டட வசதி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

இன்றைய நவீன கற்றல் கற்பித்தலுக்கு வேண்டிய உபகரணங்கள் பாடசாலையில் இல்லை. நூலகம், ஆசிரியர்கள் ஓய்வு அறை என்பனவும் இல்லை.

அதிபரின் அலுவலக அறை களஞ்சியமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பாரிய நெருக்கடிகள் பாடசாலையில் காணப்படுகின்றபோதிலும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடனும் மனிதநேயத்துடனும் செயற்பட்டு வருகின்றார்கள்.

பாடசாலைக்கு வேண்டிய குடிதண்ணீர் வசதியை குழாய் மூலம் வலி.மேற்குப் பிரதேச சபை வழங்கி வருகின்றது.

## கட்டட வசதி, கற்றல் உபகரணங்கள் என்பன பாடசாலையின் உடனடித் தேவையாகவுள்ளன

இதற்கான கட்டணத்தை வட்டுக்கோட்டை சமாதானக் கோட்டை ஆண்கள் இல்லம் செலுத்தி வருகின்றது.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் இயங்குகின்றது. பெற்றோர்கள் பொருளாதார

**பவித்திரன்**

ரீதியாக உதவி செய்யமுடியாதபோதிலும் ஏனைய உதவிகளை முழுமையாக வழங்குகின்றார்கள்.

தற்போது பழைய மாணவர் சங்கம் இல்லை. பழைய மாணவர் சங்கம் அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஊரில் உள்ள பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள்.

தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்கள் கோட்ட மட்டம் வரை சென்று வருவதுடன் விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வருகின்றார்கள்.


பாடசாலையின் அதிபர்
கனகநாயகம் ஹரிகரசக்தி

இந்த மாணவர்களின் இசை, நாடகம் வலய மட்டத்தில் இம்முறை 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

உலக உணவுத் திட்டம் பாடசாலை மாணவர்களுக்கு அத்தியாவசியமானதொன்றாகும். மாணவர்களின் வரவும் நல்லமுறையில் காணப்படுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் கட்டட வசதி, விளையாட்டு உபகரணங்கள், புத்தகப் பைகள், பயிற்சிக் கொப்பிகள், காலணிகள் போன்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

பொதுசுகாதாரப் பரிசோதகர் பாடசாலைக்கு வருகை தந்து மாணவர் சுகாதாரத்தைக் கவனித்து வருகின்றார். மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் 15 பேர் கல்வி பயில்கின்றார்கள். 6 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளது. வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகும் உதவிகளை செய்து வருகின்றது.

பாடசாலைக்கு நவீன கற்றல் கற்பித்த உபகரணங்களின் தேவையையும் கட்டட வசதியையும் உடனடியாகப் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவை உள்ளது. ✱

# பாடசாலையின் தரத்தை அறியும் அளவுகோலாக மாணவர்களின் நடை, உடை, பாவனை உள்ளன

கடந்த வாரம் 'மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதில் முன்னின்று உழைப்பவை பாடசாலைகளே' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.

காலைப் பிரார்த்தனைக்காக மாணவர்கள் ஒன்றுகூடும் நிகழ்வில் பத்திரிகை வாசித்தல், வாசிப்பதற்குச் சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்தல், வகுப்பறையில் ஒவ்வொரு மாணவர்களையும் முன்னிலைப்படுத்துவதற்கு ஏற்ற பண்பு

## மாணவரின் படைப்பாற்றலை வளர்ப்பதற்கு கல்விச் சமூகம் தயக்கமின்றிச் செயற்படுமா?

சார், அறிவுசார், பணிவுசார் ஆளுமைக் கூறுகளை இனங்கண்டு வல்லமை பெறச்செய்தல். மேலும் படைப்பாற்றலையும், அரங்கேறும், அரங்கேற்றும் சந்தர்ப்பங்களையும், தலைமைதாங்கும் முதன்மைத்துவத்தையும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு எந்தவித தயக்கமோ தட்டுப்பாடோ காட்டுதல் ஆகாது.

கற்றல் கற்பித்தலில் சம்மந்தப்பட்ட இருசாராரும் தத்தமது பங்களிப்பில் எவ்வித சோர்வுமின்றி ஈடுபடுவதற்கு உரியவர்கள் பாதுகாப்பாக இருப்பது அவசியமானதாகும்.

### உடை, நடை, பாவனை

பாரம்பரியமாக ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு சமூகத்தால் வழங்கப்படும் அங்கீகாரமாக இந்த முக்கூட்டு பாவனைச் சொல்லினை நாம் ஒரு அளவுகோலாக ஏற்றுக் கொள்கின்றோம். இந்த அளவுகோல் பாடசாலைகளுக்கும் பொருந்தும். மாணவர்களின் உடையமைப்பு, நடைபேதங்கள், மாதா-பிதா-குரு-தெய்வ வழிவந்த பயபக்தி யாவுமே சம்பந்தப்பட்ட பாடசாலைச் சமூகம் மிகவும் உடன்பாடு கொள்வதற்கும், விமர்சனம் செய்வதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும், விருத்தி செய்வதற்கும் ஏற்புடையதாயின், மாணவர்கள் பாடசாலைச் சந்தர்ப்பங்களினால் வெல்லப்படுவார்கள். வெல்லப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான பலாபலன்களைக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிலே உடை நடைபாவனையால் எந்தவொரு மாணவனும் தான் சார்ந்த பாடசாலைச் சமூகத்தால் தகுதியுள்ளவனாகக் கருதப்படுமிடத்து பாடசாலையும், தானும், கல்விச் செயற்பாடுகளும் நெருக்கமாக அன்னியோன்யப்படுத்தப்படும். மாணவம் என்பது மனித நேயத்தினால் சூழப்பட்ட மாண்புடையது.

**கே.எஸ்.சிவஞானராஜா**

அத்தகு பயிர்களை வாழ்வாங்கு வாழச் செய்வதற்கு ஆசிரியர்களின் ஆசீர்வாதங்கள் என்றும் துணையாக விளங்கும் என்பதோடு, நீடு வாழவும் செய்யும் என்பதனால், மாணவர்கள் தளம்பல் நிலைக்கு ஆட்படினும், ஆன்மீக உள்வளத் தோச்சிகளினால் வெல்லப்படுகின்றார்கள்.

மேற்கூறப்பட்ட அனுகூலங்களோடு, பாடசாலை ஆரம்பம் முதல் நிறைவடையும் வரை ஒவ்வொரு மாணவனையும் பாடசாலை அனுசரணையாக, ஆளுமைப்படுத்த வேண்டுமெனக் கருதவேண்டிய காலம் தன்னை முன்மொழிவுடன் அர்ப்பணிக்கின்றது. கல்விப் பசியானது ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனை விடுத்து, அல்லாத தேவைகள் ஏற்படுமிடத்து அவை பற்றித் தீர ஆராய்ந்து, பொருத்தமென மூத்தோர் கருதுமிடத்து அவர்களுக்கு அங்கீகாரத்துடன் இளைஞராம் மாணவர்கள், தத்தமது மூலாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே காலத்தின் எதிர்பார்ப்பாகும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், மதகுருமார்கள் யாவருமே ஒவ்வொரு மாணவனையும் சதா அவதானித்த வண்ணமே இருப்பதனை ஒவ்வொரு மாணவர்களும் உணர்வார்களாக இருந்தால், அத்தகு மாணவச் செல்வங்களின் பாடசாலை வாழ்க்கை சிறப்பாக அமைந்திடும். சிறப்பாக வாழ்க்கை அமையவே கல்விச் சமூகம் தன்னை அர்ப்பணிக்க ஆண்டவன் கண்திறந்துள்ளான். கல்வியின் இறுதி இலக்குக் கடவுளே தான். கடந்து நிற்பதைக் கண்டறிதல். இந்த அரவணைப்புடன் அஞ்ஞானம் மறைந்து, ''மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம்'' பாடசாலை-வாழ்க்கையை, மாணவர்களுக்கு வித்திடுமாயின் மாணவர்கள் பாக்கியவான்களே. இதனைப் பாடசாலைகள் கருத்தில் கொள்வதனால் மாணவர்களுக்கு ஆளுமைச் சந்தர்ப்பங்களை வழங்குவதில் பாடசாலைகள் முன்னிற்கின்றன.

(முற்றும்)


பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் அ.கணேஷ் தம்பதியர் மாணவிகளால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் வங்கி ப.வ.க.

## (2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்.

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட் ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 25.07.2008ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கிளை: யாழ்ப்பாணம்**

**கணக்கு இல: 0850-01107296-001**

“பஞ்சரத்தினம் திருநாதன், பஞ்சரத்தினம் ஷண்முகதாசன் மற்றும் சோதிமலர் திருநாதன் (பங்காளிகள்- எம்/எஸ் லிட்டில் இன்டியன் பாஷன் மற்றும் எம்/எஸ் காவேரி ரெக்ஸ்) ‘கடனெடுத்தவர்கள்’ என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு வீ.ரி.சிவலிங்கம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003 ஆகஸ்ட் 18ஆம் திகதிய 225 மற்றும் 226, 2005 பெப்ரவரி 22ஆம் திகதிய 474 மற்றும் 2005 ஒக்ரோபர் 28ஆம் திகதி 632ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2007 ஆகஸ்ட் 31ஆம் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தோராயிரத்து முந்நூற்றெண்பத்தொன்பது ரூபா எழுபத்துமூன்று சதம் (ரூபா 78, 21,389/73) செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா78, 21,389/73 பணத்தொகையும் 2007 செப்ரெம்பர் 1ஆம் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும்பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 225, 226, 474 மற்றும் 632ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப.வ.கம்பனிக்கு ஈடு வைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு.துஷிதகருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க.பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.”

## மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முதலாம் அட்டவணை

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் சுண்டிக்குளிப் பங்கில் சிவியத்தெருவில் அமைந்துள்ள “சிங்கத்தின் வளவும் அருமைய வளவும் ஏனைய பகுதிகளும்” என்றழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும் 5லாச்சம் வ.வி.விஸ்தீரணமுள்ளதாக நில அளவைமூலம் 6½ லாச்சம் வ.வி. ஆனால் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.தம்பையாவால் வரையப்பட்ட 5.6.76 இன் வரைபடம் இல.291 இன்படி அது 6 லாச்சம் 5.47 குழியைக் கொண்டுள்ளது. இதிலிருந்து தெற்கில் சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்ட ஆதனம் 2 லாச்சம் வ.வி 8.25 குழி விஸ்தீரணமுள்ளதாக அதன் கண்ணுள்ள வீட்டுடனும் ஏனைய தோப்புக்களுடனும் உடைமைக்கான உரிமைகளுடனும் இதன் எல்லைகள்- கிழக்கு: அருணாசலம் ராசையாவினதும் மயில்வாகனம் பரமசாமியினதும் ஆதனங்கள்: வடக்கு: பூலோகசிங்கத்தின் மனைவி சோதிமலரின் ஆதனமும் எஞ்சியுள்ள ஆதனமும், மேற்கு: சுப்பிரமணியம் நடராசாவின் ஆதனம்: தெற்கு: நிக்கலஸ் ஒழுங்கை மற்றும் அருணாசலம் ராசையாவின் ஆதனம் மேலும் இந்த ஆதனத்துக்குச் சொந்தமாக அதனுள் இருக்கும் எல்லாம்.

## மேலே குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாம் அட்டவணை

வட மாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் பிரிவிலும் சுண்டிக்குளிப் பங்கில் சிவியத்தெருவில் அமைந்துள்ள “வரி வளவும் விலாத்தித் தோட்டமும் தாழையடி வளவும்” என்றழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும் 13 லாச்சம் விஸ்தீரணமுள்ளதாக. இதில் கிழக்குப் பக்கத்தில் 8 லாச்சம். இதிலிருந்து தெற்குப் பக்கத்தில் ஏற்கனவே கைமாற்றப்பட்ட 4 லாச்சம் வ.வி.நீங்கலாக எஞ்சிய 4 லாச்சம் வ.வி. இல் தெற்குப் பக்கத்தில் 2 லாச்சம் வ.வி.இதன் எல்லைகள்- கிழக்கு: முதலியா ஒழுங்கை: வடக்கு: மீதிக் காணி: மேற்கு: பொன்னையா ஏரம்புவின் ஆதனம்: தெற்கு: கன்கசபை பூலோகசிங்கத்தினதும் சின்னத்துரை சிவசுப்பிரமணியத்தினதும் ஆதனங்கள். மேலும் அதனுள் இருக்கும் எல்லாம்.

## மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றாம் அட்டவணை

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் சுண்டிக்குளிப் பங்கில் சிவியத்தெருவில் இப்போது அரியாலையில் அமைந்துள்ள “சிங்கத்தின் வளவும் அருமைய வளவும் ஏனைய பகுதிகளும்” என்றழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும் 6½ லாச்சம் வ.வி.விஸ்தீணமுள்ளதாக ஆனால் உத்தரவுபெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான எம்.தம்பையாவால் வரையப்பட்ட 05/06/76 இன் 291ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தின்படி இது 6 லாச்சம் வ.வி.16.61குழி விஸ்தீரணமுள்ளதாகக் குறிக்கப்பட்ட துண்டு 1 அதன் கண்ணுள்ள எல்லாவற்றுடனும் வீட்டுடனும் ஏனைய உடைமை உரிமைகளுடனும், இதன் எல்லைகள்- கிழக்கு: நடராசா ஓதிராசாவின் ஆதனம்: வடக்கு: சதீஸ்வரன் ஒழுங்கை: மேற்கு: சபாரத்தினம் பெரியநாயகத்தினதும் ஏனையோரதும் ஆதனம்: தெற்கு: திருநாதனின் மனைவி சோதிமலரின் ஆதனம் சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3எனக் குறிக்கப்பட்டது. இது முழுவதும் இப்போது 1லாச்சம் வ.வி.15.89 குழி விஸ்தீரணமுள்ளதாக 04/11/2004 இன் வரைபடம் இல.0483 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நான்காம் அட்டவணை

வடமாகாண யாழ்.மாவட்டத்திலும் பிரிவிலும் சுண்டிக்குளிப் பங்கில் சிவியத்தெருவில் இப்போது அரியாலையில் அமைந்துள்ள “சிங்கத்தின் வளவும் அருமைய் வளவும் ஏனைய பகுதிகளும்” என்றழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும் 1லாச்சம் வ.வி.மற்றும் 16.61 குழி விஸ்தீரணமுள்ளதாக வீடு, கிணறு மற்றும் தோப்புகளுடன் உத்தரவு பெற்ற நிலஅளவையாளரும் மட்டம் பார்ப்பவருமான எம்.தம்பையாவால் வரையப்பட்ட 05/06/76இன் 291ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்ட இதன் எல்லைகள்- கிழக்கு: மயில்வாகனம் பரமசாமியின் மனைவி அழகம்மாவின் ஆதனம்: வடக்கு: ஒழுங்கை: மேற்கு: சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டது நடராசாவின் கைம்பெண் திருப்பதிக்குச் சொந்தமானது: தெற்கு: சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்டது திருநாதனின் மனைவி சோதிமலருக்குச் சொந்தமானது. மேலும் அதனுள் இருக்கும் எல்லாம்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**எம்.கே.பிரேமதிலக,**

**உதவிப் பொதுமுகாமையாளர்- சட்டம்.**

(சி/554788)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் மோதிக்கொள்ளும் விறுவிறுப்பான காட்சிகளையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:நேசன்)*

### சங்கானைக் கோட்ட உதைபந்தாட்டம்

## விக்ரோறியா இறுதிவரை போராடியபோதும் சாதித்துக் காட்டி வென்றது வட்டு.மத்தி

வலி.வடக்கு,செப்.26

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினார்கள். இரு அணிகளையும் சேர்ந்த ஒவ்வொரு வீரர்கள் தவறான ஆட்டம் காரணமாக மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார்கள்.

முதல்பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றபோதிலும் அதனை இரு அணிகளும் பயன்படுத்திக் கொள்ளத் தவறிய நிலையில் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் வட்டு.மத்திய கல்லூரியினர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் கோல் கம்பத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். 7ஆவது நிமிடம் வட்டு.மத்திய கல்லூரிக்கு மூலை உதையொன்று கிடைக்கப் பெற்றது.

அதனை உரிய முறையில் பயன்படுத்திய வட்டு.மத்திய கல்லூரி முன்னணி வீரன் சசிகரன் உதைக்கப்பட்ட மூலை உதையை தலையால் இடித்து ஒரு கோலை பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் மிகவும் சூடுபிடித்தபோதிலும் இரு அணிகளும் மாறிமாறி கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டபோதிலும் அது கைகூடவில்லை.

வட்டு.மத்திய கல்லூரி மிகவும் விவேகமாகக் கொண்டு வந்து அடித்த மூன்று பந்துகளை விக்ரோறியாக் கல்லூரி கோல் காப்பாளர் தடுத்து நிறுத்தி எதிரணியின் முயற்சியை முறியடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆட்ட இறுதியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றி பெற்று 2008ஆம் ஆண்டுக்கான சங்கானை கல்லூரிக் கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)

## விளையாட்டுப் போட்டிகள்

கரவெட்டி,செப்.26

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஐ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொள்வார். (203-70)

* * *

மந்திகை,செப்.26

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இம்முன்பள்ளி விளையாட்டுப் போட்டிக்கு கிராம உத்தியோகத்தர் பி.தயாநிதி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-218)

## தென்மராட்சிக் கழகங்களின் மென்பந்தாட்டம்: சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது வின்டோஸ்

நாவற்குழி,செப்.26

கைதடி மேற்கு இளைஞர் கழகம் தென்மராட்சி ரீதியில் அண்மையில் நடத்திய மென்பந்துச் சுற்றுப்போட்டியில் சாவகச்சேரி வின்டோஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

16 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியின் இறுதிச் சுற்றில் சாவகச்சேரி வின்டோஸ் விளையாட்டுக் கழகமும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி வின்டோஸ் விளையாட்டுக் கழகம் 14 பந்துப் பரிமாற்றத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸ்ராலின் மட்டுமே கூடுதலான ஓட்டங்களாக 30 ஓட் டங்களைப் பெற்றிருந்தார்.

நிசாந் 3 விக்கெட்டுகளையும் அருண் மற்றும் செந்தூரன் தலா 2 விக்கெட்டுகளையும் விதுரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு 60 ஓட்டங்களை சுலப வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மிக மோசமான துடுப்பாட்டத்தினால் சகல விக்கெட்டுகளையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

ஸ்ராலின் மற்றும் சங்கர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், டார்சன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும், இப்போட்டி தொடரின் தொடர் ஆட்ட நாயகனாகவும் சாவகச்சேரி வின்டோஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ராலினும் இறுதிப்போட்டியின் பந்து வீச்சாளராக கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிசாந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டிக்கு நடுவர்களாக வை. இராஜேஸ்வரன் மற்றும் க.விபுலன் ஆகியோர்கள் கடமையாற்றினார்கள். (1-288)

### விளையாட்டு அரங்குகளில்

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,செப்.26

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் 13,16,18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 ம ணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**13 வயது பிரிவு**

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

**16 வயது பிரிவு**

சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**18 வயது பிரிவு**

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி. எதிர் சுன்னாகம் மயிலணி வித்தி. (86)

* * *

வலி.வடக்கு,செப்.26

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

மாதகல் சென்.யோசேப் மகா வித்தியாலயம் எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்.யோசப் வித்தியாலயம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (1-86)

## சவாலை எதிர்பார்த்து காத்திருக்கிறார் பிரட் லீ!

ஜெய்ப்பூர்,செப்.26

4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்துள்ளது. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. இதற்கு முன்னதாக 2 பயிற்சி ஆட்டங்களிலும் ஆஸ்திரேலியா விளையாட உள்ளது.

இந்த நிலையில் தற்போதைய தொடரில் இரு அணி வீரர்களுக்கும் மோதல் நடக்காது, சிநேகிதமே மலரும் என்று ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரட்லீ கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டி வருமாறு :-

இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) கிரிக்கெட் போட்டி இரண்டு நாட்டு அணி வீரர்களும் மனம் திறந்து நட்புறவோடு பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. எனவே வருகிற தொடர் புதிய அத்தியாயம் போன்றதாகும்.

ஐ.பி.எல். போட்டியில் மலர்ந்த நட்பு இப்போது இருப்பதால் இந்தத் தொடர் நட்புறவைப் பறை சாற்றுவது போன்று இருக்கும் என்று நம்புகிறேன். கடந்த காலங்களில் நடந்தது பற்றி எனக்குக் கவலை இல்லை. நல்லதொரு கிரிக்கெட் ஆட வேண்டும் என்பதே எங்களது நோக்கம் ஆகும்.

எங்களது பந்துவீச்சுத் தாக்குதலுக்கு நான் தலைமை வகிப்பதால் எனக்கு நிறைய நெருக்கடி உள்ளது. ஆனால் இந்த நெருக்கடியை நான் விரும்புகிறேன். சவாலை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கிறேன். நான் இந்தியாவில் இதுவரை டெஸ்ட் போட்டி ஆடியது கிடையாது. ஆனால் இங்கு 20 ஓவர் போட்டி மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடிய அனுபவம் இருக்கிறது.

இந்திய அணியில் டெண்டுல்கர் மற்றும் வி.வி.எஸ்.லட்சுமணுக்கு பந்து வீசுவது மிகக் கடினமாக இருக்கும். அதுவும் அவர்களது சொந்த மண்ணில் ஆடுவதால் இன்னும் கடினமாக இருக்கும்.

டெண்டுல்கருக்கு நிகரான வீரர் உலகில் வேறு யாரும் கிடையாது. அவருக்கு எதிராக பந்து வீசுவது எப்போதும் சவாலானது.



சைமண்ட்ஸ் மிகச் சிறந்த வீரர். அவரைப் போன்ற வீரர்கள் தங்கள் அணியில் இடம் பெறவேண்டும் என்று ஒவ்வொரு அணியினரும் விரும்புவார்கள்.

- இவ்வாறு பிரட்லீ கூறினார். (சி)

## இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு!

### அணித்தலைவர் கும்ளே நம்பிக்கை



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஸிஸ் தொடரை இந்தியா வெல்வதற்கான சிறந்த வாய்ப்புகள் இருக்கின்றன என்று அந்த அணியின் தலைவர் அனில் கும்ளே தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணியில் அனுபவம் குறைந்த வீரர்கள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றமையாலும் இந்திய அணியின் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் பலம் வாய்ந்த நிலையில் இருப்பதாலும் இந்தியாவுக்கு இம்முறை வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

சமீபத்தில் நடந்த இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் இந்தியாவின் நடுவரிசை வீரர்கள் சிறப்பாக செயல்படாதமையாலேயே தொடரை இந்தியா இழக்க நேரிட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

"கடந்த வருடம் ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்டிலும் 2004 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த டெஸ்டில் நாங்கள் தோல்வியை சந்திக்க நேர்ந்தது. ஆனால் இந்தமுறை அப்படியல்ல. சிறந்தொரு வெற்றி வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைத்திருக்கிறது. எமது வீரர்கள் போதிய ஓய்வு எடுத்திருக்கிறார்கள். நல்ல பயிற்சிகளையும் பெற்றிருக்கிறார்கள்" - என்று கும்ளே மேலும் கூறினார்.

"இந்திய வீரர்கள் தமது எதிர்காலத்தைத் தக்க வைதது்க்கொள்வதற்காக இந்த டெஸ்ட் தொடரில் பிரகாசிக்வேண்டிய அழுத்தத்தையும் கொண்டிருக்கின்றனர். அதுவும் அவர்கள் திறம்பட விளையாடுவதற்கு உந்துசக்தியாக அமையும் என்றும் கும்ளே மேலும் சொன்னார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் முகாமைத்துவப் போட்டியில் வெற்றி பெற்ற கிராம சேவையாளர்கள்

நல்லூர், செப். 26.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கிராம அலுவலர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஜே/108 நல்லூர் வடக்கு கிராம அலுவலர் திருமதி ஆர்.கிராகினி முதலாவது இடத்தையும் ஜே/116 கோண்டாவில் தென்மேற்கு கிராம அலுவலர் திருமதி பி.குணரத்தினம் இரண்டாவது இடத்தையும் ஜே/125 கொக்குவில் மேற்கு கிராம அலுவலர் பி.சஜிதா மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

(203– 111)

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

வடமராட்சி, செப்.26

கரவெட்டி தச்சை ஐங்கரன் இந்து அறநெறிப் பாடசாலையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை நிர்வாக சபையின் தலைவர் சி.செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைச் செயலாளர் வே.குலநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர்.

(202-70-236)

## முதியோர் தின கொடிவாரம்

யாழ்ப்பாணம்.
செப்.26

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை கொடிவாரம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

(203–207)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்: 04.03.1969
அஸ்தமனம்: 03.10.2002

அமரர்
**நடராசா உதயகுமார்**
(உதயன்)

திதி: அபரபக்க துவாதசி
26.09.2008

ஆறவில்லை எம் மனது
அழியாத உம் நினைவுகளால்...
ஆறாம் ஆண்டில் உங்களை
அஞ்சலிக்கின்றோம்....

பக்கஸ் லேன், மானிப்பாய். குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி**
**புஸ்பராணி**
**சிவப்பிரகாசம்**



*மலர்வு: 18.04.1949*
*உதிர்வு: 24.09.2000*

திதி: அபரபக்க துவாதசி
(26.09.2008)

எட்டு ஆண்டுகள் ஆன போதிலும்
அழியாத உங்கள் நினைவலைகள்
அணையாத தீபமாய் எம் இதயத்தில்
என்றென்றும் ஒளிவீசும் தாயே!


உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொ.சிவப்பிரகாசம்
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

## முதலாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

*மண்ணில்: 11.06.1967*
*விண்ணில்: 26.09.2007*

அருட்பணி
**நீக்கிலாப்பிள்ளை**
**பாக்கியரஞ்சித்**



மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
மறைபணியாற்றிய மகனே குரு மணியே
யுத்தத்தின் கொடூரத்தை எதிர்த்துழைத்த நீ
ஏதிலிகளின் அன்பனாய் அருட் பணியாற்றினாய்

எங்கே சென்றாய் எம்குருவே, ஏங்குகின்றோம் நாம்
ஓராண்டு ஓடிவிட ஒரு கணமேனும் மறந்திலோம்
உன் ஆன்மா சாந்திபெற ஓயாது அழுகின்றோம்
உன்னதன் தாழ் வணங்குகின்றோம் அமைதி பெற ஐயா!

பிரிவால் தவிக்கும்:
அம்மா, தம்பி குடும்பம், அன்ரி குடும்பம்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி காராளசிங்கம்**
(யப்பான்)

திதி: 26.09.2008 (வெள்ளிக்கிழமை)

**தோற்றம்: 03.06.1945**

**மறைவு: 10.10.2004**

நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாகத் தொடருதையா
தாங்காது தவிக்கின்றோம்
உங்கள் பிரிவுத் துயரால்
இனி எப்போது பார்ப்போம்
உங்கள் திருமுகத்தை
நீங்கள் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும்
மறையாது ஐயா!

25, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவுனர் தினம் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வித்தியாலய பழைய மாணவனும் கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீடாதிபதியுமான பேராசிரியர் நா.செல்வக்குமாரன் நிறுவுனர் தின உரையை நிகழ்த்துவதையும் பழைய மாணவர்சங்க கொழும்புக் கிளைத் தலைவரும் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளருமான சே.ஏகாம்பர நாதன் தலைமையுரை நிகழ்த்துவதையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கர்ணன்)

## பருத்தித்துறைப் பிரதேசத்தில் இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்சி

வடமராட்சி, செப். 26

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு அலுமினிய பொருத்துகை, பற்றிக் பிறின்ரிங் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க யாழ். பிராந்திய தொழிற்றுறைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ள இப்பயிற்சி நெறிகளுக்கான திட்ட முன்மொழிவுகளை பிராந்திய தொழிற்றுறைத் திணைக்களம் 'நெக்டெப்' நிறுவனத்திடம் சமர்ப்பித்துள்ளது.

நெக்டெப் நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைத்ததும் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (1-236)

### தாய்லாந்து - இந்திய வர்த்தகக் கண்காட்சிகளில்

## யாழ்.வர்த்தகர்களும் பங்குபற்ற வர்த்தகர் கழகம் ஏற்பாடு

கொழும்பு,செப்.26

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் தாய்லாந்து மற்றும் இந்தியாவில் நடைபெற்றவிருக்கும் வர்த்தகக் கண்காட்சிகளில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவிருக்கின்றது. இதற்கான வாய்ப்பினை யாழ்ப்பாண வர்த்தகர் கழகம் ஏற்பாடு செய்து தரவிருக்கின்றது.

தாய்லாந்தில் ஒக்ரோபர் 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் கைத்தொழில் வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 29ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக இல.165, மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.வணிகர் கழகத்துடன் நேரடியாகவோ இல. 021 222 2367, 021 222 8593 தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

நவம்பர் 14ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை புதுடில்லியில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (55)

## வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மனிதவள அபிவிருத்திப்பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 26

வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு மனிதவள அபிவிருத்தி தொடர்பில் தேவையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு சபையிலிருந்தும் தலா இருபது உத்தியோகத்தர், ஊழியர்க ளுக்கு அவர்கள் விரும்பும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சபையின் செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர், சனசமூக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமான உத்தியோகத்தர், மேற்பார்வையாளர், தொழிலாளர் ஆகியோருக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த உத்தியோகத்தர்களுக்கென 36 பயிற்சி நெறிகள் 'ஜெய்க்கா' நிறுவன உதவியுடன் தேவைக் கணிப்பீடு செய்யப்படவுள்ளதால் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பெறவிரும்பும் பயிற்சிநெறியினை பட்டியலிட்டு அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (203-111)

## தாய்மாரை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.25

தாய்ப்பால் விழிப்புணர்வு வாரத்தை யொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தாய்மாரைக் கௌரவிக்கும் நிகழ்வினை அண்மையில் நுணாவில் பொது நூல் நிலைய மண்டபத்தில் நடாத்தினர்.

நிகழ்வில் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு கழகத்தினால் பரிசில்கள் வழங்கப்பட்டதாக கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (203-207)

# தகவல்களை ஆவணப்படுத்தி வழங்குதல் இன்றைய காலத்தின் தேவையாகும்

### வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் வலியுறுத்து

பருத்தித்துறை,செப்.26

தகவல்களை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வழங்க வேண்டியது இன்றைய காலத்தின் தவிர்க்க முடியாத தேவையாகும் என்று வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் வரதீஸ்வரன் கூறினார்.

பருத்தித்துறை ஜஸ்வின் கணனிப் பயிற்சியகத்தின் வெளியீடான ''தகவல்களம்'' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் உரையாற்றினார்.

பருத்தித்துறை சிவன் ஆலய பர்வத வர்த்தனி கலாமண்டபத்தில், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்ட பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய மாணவர்கள் தேடல் மூலம் அறிவைத் தேடிப்பெற்று வருகின்றனர். இவர்களுக்கு 'தகவல்களம்' போன்ற சஞ்சிகைகள் மிகவும் பயனளிக்கக்கூடியன. தகவல்களம் வடமராட்சி சார்ந்த கல்வி, புவியியல், கடல் வளம், பனைவளம், கலாதூரம், பண்பாடு, மற்றும் ஏனைய துறைகளோடு வரலாற்றுப் பதிவுகள், சின்னங்களையும் ஒருங்கே ஆவணப்படுத்தி 'தகவல்களம்' எனப் பொருத்தமான பெயரிட்டு வெளியிட்டுள்ளது மிகச் சிறப்பானதாகவுள்ளது. இந்த சஞ்சிகை காலாண்டுச் சஞ்சிகையாக வெளிவரவுள்ளது. இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவ தற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

பயிற்சியக ஆசிரியர் கே.திவாகர் வரவேற்புரை நிகழ்த்தினார். 'தகவல்களம்' சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூ ராட்சி நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் நிகழ்த்தினார். சஞ்சிகையின் முதற் பிரதியினை பிரதம விருந்தினரிடமிருந்து பருத்தித் துறை வங்கி முகாமையாளர் எஸ்.சிவநேசன் பெற்றுக் கொண்டார்.

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கே. அருமைச்சந்திரன் ஆய்வுரை வழங் கினார். நிகழ்வில் பயிற்சியகப் பணிப்பாளர் எஸ். மரியதாஸ், பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் யி.ஆனந்தநடேசன், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். சிவநேசன், பயிற்சியக நிர்வாகி செல்வி ஏ. கொன்சியா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

விழாவில் முன்பள்ளி சிறார்களுக்கான கற்றல், விளையாட்டு உபகரணங்களும், பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும், பயிற்சியாளர்களுக்கு கணனி இயந்திரங்களும்வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றதுடன் இறுதி யாக பயிற்சிய ஆசிரியை செல்வி ஏ.நவதர்சினி நன்றி யுரை நிகழ்த்தினார். (218-55)



## 70 மாணவர்கள் கலந்துகொண்ட தொ.நுட்பக் கருத்தரங்கு

மானிப்பாய், செப்.26

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையினால் நடத்தப்பட்ட கணனி தொழில்நுட்பக் கருத்தரங்கில் தீவகப் பிரதேச 70 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் கருத்தரங்கு முடிவில் யாழ். இளைஞர் கணனி சேவை நிறுவனத்தினால் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன.

நிகழ்வில் இளைஞர் கணனி சேவை நிறுவன விரிவுரையாளர்களான எஸ்.மயூரன், எஸ்.கிருபாகரன் புரொஜெக்டர் மூலமான விளக்கப் பயிற்சிகளை அளித்துள்ளனர். வை.சி.எஸ்.நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்ட ஐ.சி.ரி. கையேடுகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

இதேவேளை உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் கணனிக் கருத்தரங்கில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (95-55)

## ஊர்காவற்றுறை அரசஅதிபர் பிரிவில் அபிவிருத்திக்கு நிதி

நல்லூர்,செப்.25

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீகாந்தா பின்வரும் வேலைத் திட்டங்களுக்கென எட்டு லட் சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு 2 லட்சம் ரூபாவும், புளியங் கூடல் மகாமாரி சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும், அனலை தீவு சதாசிவ மகாவித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டன.

எழுவைதீவு மகாவித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை அ.த.க பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், நாரந்தனை தெற்கு றோ.க.த.க பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், சரவ ணை நாகேஸ்வரி வித்தியா லயத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், சின்ன மடு றோ.க.த.க பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், தம்பாட்டி அரசினர் த.க. பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், தம்பாட்டி கிராமிய கடற் றொழிலாளர் கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டன. (203-111)

## வடமாகாண தமிழ்த்தினப் போட்டியில் ஸ்கந்தாவுக்கு நாடகத்தில் முதலிடம்

வலி.வடக்கு,செப்.26

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற தமிழ்த்தின நாடகப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என முதலாம் இடங்களை பெற்றுக் கொண்ட இந்த நாடகம் அடுத்த கட்டமாக தேசிய மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.

சமகால நிகழ்வுகளை அழகியல் ரீதி யாக இக்குழுவினர் காட்சிப்படுத்துகின் றார்கள்.

இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையை ஆசிரியர் பு.கணேசராகவும், பாடல்களை ஆசிரியர் கவிஞர் மகாலிங்கசிவமும் எழுதியுள்ளார்கள். (203-86)



முதலிடத்தைப் பெற்ற நாடகக் குழுவினர்.

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## அச்சுவேலி கால்நடை வைத்திய அதிகாரி உபஅலுவலகத்தில் விற்பனை நிலையம்

அச்சுவேலி,செப். 26

அச்சுவேலி கால்நடை வைத்திய அதிகாரி உபஅலுவலகத்தில் வலி கிழக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையம் செயற்பட்டு வருகின்றது.

கடந்தவாரம் இந்த விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்தில் கோழிகளுக்கான தீவனம், மாடு ஆடுகளுக்கான தீவனங்கள் மற்றும் மருந்து வகைகள் நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கால்நடைத் தீவன விற்பனை நிலையம் தற்பொழுது வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று தினங்கள் செயற்படுகின்றது.

விரைவில் வாரத்தில் முழுநாளும் செயற்படும் என வலிகிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கா.சிவபாலன் அறிவித்துள்ளார்.

கால்நடை வைத்திய அதிகாரி உபநிலையத்தில் கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல், நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சை, மற்றும் நோய்களுக்கான சிகிச்சைகளும் - ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படுவதோடு வாரத்தில் முழுநாளும் கால்நடை வளர்ச்சி நிலையம் செயற்படுவதாக நிலைய பொறுப்பதிகாரி எஸ்.சத்தியவாகீஸ்வரன் தெரிவித்தார். (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர்களை வீடுகளில் பராமரிக்கும் முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,செப். 26

முதியோரை முதியோர் இல்லங்களில் தனிமைப்படுத்தி பராமரிப்பதைத் தவிர்த்து சொந்த வீடுகளில் வைத்துப் பராமரிப்பதற்கான முன்மொழிவுகள் விரைவில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 17ஆம் திகதி யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் சமூகசேவைத் திணைக்கள திட்டமிடல் இணைப்பாளர் ரி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

பிராந்தியத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் முதியோர் நலன் பேணுவதற்காகத் தலா 25 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(202-288-302)

# கடந்த 300 ஆண்டுகளில் 134 பறவையினங்கள் அழிவு!

## பிரிட்டன் ஆய்வு மையம் திடுக்கிடும் தகவல்

டோக்கியோ,செப்.26

கடந்த 300 ஆண்டுகளில் 134 பறவை இனங்கள் முற்றிலுமாக அழிந்துபோயுள்ளன. பிரிட்டனைச் சேர்ந்த பறவைகள் ஆராய்ச்சி அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இவற்றில் 27 பறவை இனங்கள் 18-ஆம் நூற்றாண்டிலும், 51 பறவை இனங்கள் 20-ஆம் நூற்றாண்டிலும் அழிந்து போயுள்ளன.

இந்த நூற்றாண்டில் இதுவரை 3 பறவை இனங்கள் முற்றிலுமாக அழிந்து போயுள்ளன. மேலும் 625 பறவை இனங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் குறைந்து வருகின்றது என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

தற்போதுள்ள பறவை இனங்களில் அதிகபட்சமாக 1226 பறவை இனங்கள் ஜப்பான் நாட்டிலுள்ளன.

இந்தியாவில் வல்லூறு, நீர்ப்பறவை ஆகியன அழிந்துவரும் பறவைகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

கடந்த 20 ஆண்டுகளில் 225 பறவையினங்கள், அழிந்து வரும் பறவைகள் பட்டியலில் புதிதாக இடம் பெற்றுள்ளன. அழிந்து வரும் பறவைகள் பட்டியலில் இடம் பெற்றிருந்த 32 பறவை இனங்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

இதுபோல பறவைகள் இடம் பெயர்வது அதிகரித்துள்ளது. ஆசிய-பசுபிக் பகுதிகளில் வசித்துவந்த பல பறைவைகள் இடம் பெயர்ந்துள்ளன. வாழ்வதற்கு போதிய சூழ்நிலை இல்லாததே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்தவந்த இடத்திலிருந்து பறவைகள் இடம்பெயரக் காரணம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (சி)

# சாரணர் பாசறை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் வருடாந்த பாசறை விழாவும் குருளைச்சாரணர் வெளிக்கள நாளும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண சாரண ஆணையாளர் த.போஜனும் கலந்து கொள்வர்.

மைதானக் காட்சிகளும் பாசறைத் தீ நிகழ்வும் இடம்பெறும். (202-325)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், செப்.26

சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகிறது. விழாவின் போது தினமும் பிற்பகல் அம்பாள் கொலுக் காட்சியும் யந்திர பூசையும் நடைபெற்று அபிராமி அந்தாதி, நவராத்திரிப் பாடல்கள், சகலகலாவல்லிமாலை ஓதுதல் ஆகியவை நடைபெறும். (28-55)

* * *

யாழ்.மாநகரசபை வளாகத்தில் அமைந்துள்ள நல்லூர் பண்டார மாளிகை ஆதி நரசிங்க வைரவர் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதாக மாநகர சபையின் இந்துசமய விவகாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(302-55)

* * *

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீதேவி பூதேவி சமேத அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு ஹரி மன்றத்தினரால் திறந்த பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சையில்கலந்து கொள்பவர்கள் பின்வரும் விலாசத்திற்கு விரைந்து தொடர்பு கொள்ளும் வண்ணம் ஹரி இளைஞர் மன்றம் கோரியுள்ளது.

# நியந்த்ரீ அறிவித்தல்

பின்வரும் பரீட்சைகளில் முதல் முறையாகத் தோற்றி சித்தியடைந்த அந்தண மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழின் படப்பிரதியுடன் தங்களின் விவரங்களை 'செயலாளர், நியந்த்ரீ, சிவன்கோயில், நல்லூர், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு 05.10.2008 ஆம் திகதிக்கு முன் நேரிலோ, தபாலிலோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

| பரீட்சை | ஆண்டு |
|---|---|
| 01. க.பொ.த. சா/த | - 2007 |
| 02. க.பொ.த. உ/த | - 2007 |
| 03. 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை | - 2007/2008 |

சிவன்கோயில்,
நல்லூர். (சி/554820) செயலாளர்.

# 25ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி

பிறப்பு 26 . 09 . 1983



இறப்பு 12 . 08 . 2006

## செல்வி மேரி அன்ரனிற்றா அன்ரனியூஸ்

(யாழ்.பல்கலைக்கழகம், கலைப்பரிவு- 3ஆம் வருடம்) தாழையடி

ஈர் பத்து மூன்று வயதுவரை எம்மோடு வாழ்ந்து,
இறைவனிடம் செல்வதற்காக எமை
விட்டுப் பிரிந்தாயோ?
ஈர் பத்து ஐந்து வயது இன்று உமக்கான போது
இன் முத்தம்தர அன்பு மகளே அருகில்
நீ இல்லையே என ஏங்குகின்றோம்
உனது ஆன்ம சாந்திக்காக என்றும்
வேண்டுகின்றோம்.

இல:823, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு-திருமதி அன்ரனியூஸ்
(பெற்றோர்).

(78711)

# 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மலர்வு 19 . 02 . 1921



உதிர்வு 31 . 08 . 2008

## அமரர் நடராஜா பத்மநாதன்

## (வழக்கறிஞர்-Advocate)

கடந்த 31.08.2008இல் சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் மற்றும் மரணச்செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு வந்து ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் தொலைபேசி, தொலைநகல், தந்தி ஊடாக அனுதாபச் செய்தி கூறியவர்களுக்கும் எனது இல்லத்திற்கு நேரடியாக வந்து அனுதாபம் தெரிவித்த கூட்டுறவாளர்களுக்கும் அதனை விட பத்திரிகையூடாக கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது அன்புத் தந்தையின் நினைவாக 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 28.09.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


முகவரி:
"ஸ்ரீ பிருந்தாவனம்",
37/1, வைமன் வீதி,
நல்லூர்.

(78729)

(மகன்)

# நினைவலைகள்

## 31ஆம் நாள் 115ஆம் நாள்



**அமரர் பெரியான் கணபதி**
தோற்றம்: 13.04.1926
மறைவு: 27.08.2008
திதி: துவாதசி

26.09.2008

**திருமதி கணபதி முத்தம்மா**
தோற்றம்: 03.11.1931
மறைவு: 04.06.2008
திதி: பிரதமை

நாள்கள் பல ஓடி மறைந்தாலும்
நம்மனதில் வீற்றிருக்கும்
அன்பு உள்ளங்களான
உங்களின் ஞாபகங்கள்
ஓடி மறைந்திடாது.

அன்பை, பாசத்தை, அறிவை
உழைப்பின் உயர்வை
ஊட்டி வளர்த்திட்ட
உங்களின் ஆத்ம சாந்திக்காக
ஆயுள் வரைக்கும்

**ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(78744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கருத்துருவ ஆக்கிரமிப்பு

அடக்குமுறை ஆட்சியாளர்களின் ஆதிக்கச் செல்வாக்கை நிலைநிறுத்தும் கருவிகளாக வெறும் நாசகார ஆயுதங்களும், படைப்பலங்களும் மட்டும் பிரயோகிக்கப்படுவதில்லை. அதற்கு அப்பாலும் ஒரு வலிமையான கருவி இருக்கிறது.

அந்தக் கருவி ஜடப்பொருள் அல்ல. அந்த உபகரணம் உடலால் தொட்டுணரக் கூடியதல்ல. ஆனால் அது பெருநாசம் ஏற்படுத்த வல்லது. அது சிந்தனையால் அறியப்படுவது.

ஆயுதங்களும், படைப்பல வலிமையும் பௌதீக ரீதியான தீங்கை இழைக்கின்றன என்றால் இந்தக் கருவி எண்ணரீதியான அழிவை நிலைநிறுத்துகிறது.

அதுதான் கருத்துருவ ஆதிக்கம்.

தமிழர் தேசத்தின் மீது ஒருபுறம் பெரும் போரைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொழும்பு அரசு, வழமை போல - ஏனைய அடக்குமுறை ஆட்சியாளர்களைப் போன்று - கருத்தாதிக்கத்தையும் ஓர் அடக்குமுறைத் தந்திரோபாயக் கருவியாகக் கனகச்சிதமாகப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

சமூகச் சிந்தனை உலகை, ஒரு பொய்மையான மாயத் தோற்றத்துக்குள் சிக்கவைத்து, அதுவே உண்மை என்பதுபோல ஒரு கருத்துருவாக்கத்தை சமூகத்தின் மத்தியில் நம்பச்செய்து, அந்த சமூகத்தை ஆக்கிரமித்து நிற்பது ஒரு அதீத யுக்தி. குள்ளநரித்தனக்கலை. மெய்மையைத் திரிபுபடுத்தி, பொய் மையை மெய்மையாகக் காட்டும் இந்த எத்தனம் ஒருவகையில் எத்தன் வேலைதான். இந்தச் சூட்சுமமான கண்கட்டு வித்தை தம்மீது கட்டவிழ்ந்து, அதில் தாங்கள் ஆகர்ஷிக்கப்பட்டு, சுயசிந்தனை இழந்து கட்டுண்டு போவதை மக்கள் இலகுவில் புரிந்து கொள்ளப் போவதில்லை.

இந்தப் போலியான கருத்துருவாக்க 'பேய்க்காட்டலின்' பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகள் - யதார்த்தங்கள் - மக்களுக்குப் புரிவதில்லை.

அத்தகைய பொய்மை வலையில் தன்னையறியாமல் இன்று கட்டுண்டு கிடக்கிறது தென்னிலங்கை.

சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கொள்கைகளை எடுத்தியம்பிப் பரப்பும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றவை சாம, பேத, தான, தண்டம் என்ற நால்வகைத் தந்திரோபாயங்களினாலும் சாமர்த்தியமாக மூடிக் கட்டப்பட்டு ஒரு திசை நோக்கியனவாகத் திருப்பி விடப்பட்டிருப்பதைத் தென்னிலங்கைச் சமூகம் இன்றும் - இன்னும் - புரிந்து கொள்ளவேயில்லை. இந்தச் சதிப்போக்கு அரங்கேறுவது சர்வதேச சமூகத்தாலும் கூட இன்னும் சரிவர உணரப்படவில்லை.

உண்மைகளைக் கண்டறிந்து, நிஜங்களை உள்வாங்கி, யதார்த்தங்களைப் புரிந்து, அவற்றின் அடிப்படையில் சரியான எண்ணக் கருத்துக்களை உருவாக்கி, அந்தக் கருத்துக்களை வெகுசன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தைக் கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, இன சமரசத்தை நிலைநிறுத்தவேண்டிய கருத்து உற்பத்தி நிறுவனங்கள் - வேறு வார்த்தைகளில் கூறுவதானால் வெகுஜன ஊடகங்கள் - குறிப்பாக இன்று தென்னிலங்கையில், அதிகார ஆதிக்கம் பெற்ற அரசியல் செல்வாக்கிற்கு விரும்பியோ, விரும்பாமலோ, பயந்தோ அல்லது வேறு பேரினவாத எண்ணம் காரணமாகவோ அடிமைப்பட்டுப் போயிருக்கின்றன.

தென்னிலங்கையின் மனவமைப்பை - மூளையத்தை - இந்தத் தவறான கருத்தாதிக்கச் சிந்தனை செழும்பாகப் பற்றிப் பீடித்து மூடிவிட்டிருப்பதால் அது சுய சிந்தனை இழந்து நிற்கிறது. அதனால்தான் ஈழத் தமிழர்களின் வாழ்நிலைப் பிரச்சினையையும், அதில் ஆழமாகப் புதைந்து கிடக்கும் நீதி, நியாயங்களையும், கள யதார்த்தங்கள் பற்றிய உண்மைகளையும் அதனால் புரிந்துகொள்ளவே இயலாமல் உள்ளது.

தென்னிலங்கையைப் பற்றிப் பீடித்திருக்கும் இந்தத் தவறான கருத்தாதிக்கச் சிந்தனையை அம்பலப்படுத்தி, அதன் முகமூடிகளைக் கிழித்தெறிந்து, உண்மையை அதற்குப் புரியவைக்க வேண்டுமானால், கள யதார்த்தம் தெற்குக்கு உறைப்பாக உணர்த்தப்பட வேண்டும்.

தெற்கின் அதிகார வர்க்கத்தின் அரூபக்கரங்களால் திரையாகப் போடப்பட்டிருக்கும் இந்தத் தவறான கருத்தாதிக்கச் சிந்தனையை - மானசீக நம்பிக்கையை - தகர்க்கும் விதத்திலான செயற்பாடுகள் மூலம் மட்டுமே இந்த மூடிமறைப்புத் தந்திரோபாயத்தைத் தவிடுபொடியாக்க முடியும்.

அதிகார வர்க்கத்தின் வலுவான கோயாபலஸ் பிரசாரத்தை முறியடிப்பதன் வாயிலாகவே சரிந்து செல்லும் தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனையையும் தூக்கி நிறுத்தமுடியும்.

'உண்மை சுடும்' என்பார்கள். அவ்வாறு சுடும் வகையில் உண்மைகளை உறைப்பாக உணர்த்தும் நிகழ்வுகள் நடந்தேறும்போதுதான் எத்தகைய தவறான - போலியான - மனவமைப்பில் தாங்கள் இதுவரையிலும் சிக்குண்டு கிடந்தார்கள் என்ற தெளிவு தென்னிலங்கைக்கு ஏற்படும்.

அத்தகைய தெளிவை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களுக்காகத் தமிழ்த் தேசியவாதிகள் காத்திருக்கிறார்கள்.

# வடமராட்சியில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கிராம சேவகர் பிரிவுகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

## அவசியத்தை அறிவுறுத்துகின்றார் பருத்தித்துறை நீதிவான்



கரவெட்டி, செப்.26

வடமாரட்சியில் நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் மீண்டும் கசிப்பு உற்பத்தி, கொள்ளைச் சம்பவங்கள், திருட்டு என்பவை அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப் படுத்த கிராம சேவகர்கள் தத்தமது பிரிவுகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இவை தொடர்பாக உடனடியாக நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே. அரியநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

கொள்ளை, கசிப்பு, உற்பத்தி போன்ற குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர்சி. சத்தியசீலன் ஆகியோரினதும் ஏனையோரினதும் வேண்டு கோளின் பேரிலேயே இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

வடமராட்சி பொலிஸ் பிரிவு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், கிராம சேவை அலுவலர்கள், ஊடாகவியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

**மிக மோசமான நிலையைத் தோற்றுவிக்கும்**

இக் கலந்துரையாடலில் உரை யாற்றும் போதே மேற்கண்டவாறு மாவட்ட நீதிவான் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தற்போது பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கொலை, கொள்ளைகள் இல்லை. கரணவாய், நவிண்டில், வரிதி, கரவெட்டி போன்ற குறிப்பிட்ட பகுதிகளில்தான் தற்போது இவை நடைபெற்று வருகின்றன. இவற்றை உடனடியாக நாம் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும். இல்லையேல் இது படு மோசமான நிலையை ஏற்படுத்தும்.

தற்போது இக் கொடுமைகளைச் செய்வது ஒரு புதிய குழுக்களாகும். இவற்றை நாம் முளையிலேயே கிள்ளி யெறிய வேண்டும். இல்லையேல் பெருமளவில் மக்கள் பாதிக்கப்படுவார்கள். அப் பேராபத்துக்களில் இருந்து பாது காப்பது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே ஒவ்வொரு கிராம சேவர்கள்களாகிய நீங்கள் மக்களுடன் கலந்துரையாடி மக்களுக்கு விழிப்புணர்வு வரவழைத்து கொள்ளையர்களையும், கசிப்பு உற்பத்தியாளர்கள் பற்றிய தகவல்களையும் எமக்குத் தந்துஉதவவேண்டும்.

மேலும் தற்போது கசிப்பு உற்பத்தி வேம்படி, துன்னாலை, தக்கச்சம்பாதி, அல்வாய் போன்ற இடங்களில் குடிசைக் கைத்தொழிலாக நடைபெற்று வருகின்றது. இதில் பலரைக் கைது செய்தும் தண்டனை வழங்கியும் உள்ளோம். ஆனால் மீண்டும் மீண்டும் மேற்படி நடவடிக்கை தொடர்கின்றது. இவர்களுக்கு பின்னணியாக ஏதோ ஒரு பிரிவினர் இருக்கின்றனர்.

மக்களோடு மக்களாக சேவை செய்யும் உங்களால் ஏன் தற்போது நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, கசிப்பு உற்பத்தி போன்றவற்றின் தகவல்களைத் தர முடியாது-எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், புதியவர்கள் நடமாட்டம் குறித்து பொலிஸ் தொலைபேசி எண்ணுக்கோ அல்லது நீதிஸ்தல தொலைபேசி எண்ணுக்கோ அல்லது இராணுவத் தொலைபேசி எண்ணுக்கோ உடன் தகவல் தர வேண்டும். நாம் 24 மணி நேரமும் உங்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்புச் சேவை தரக் காத்துள்ளோம்.

இரவு 6.30 மணிக்கு மேல் வீதிகளில் கூட்டமாக நின்றாலோ கோயில், மடங்களில்சூதாட்டத்தில் ஈடுபட்டாலோ,ஒழுங்கைகளில் தேவையற்ற விதத்தில் கூட்டம் காணப்பட்டாலோ அவர்களைக் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளேன். எனவே இரவு வேளைகளில் தேவையற்ற நடமாட்டங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மேற்படி குற்றச்செயல்களுக்கு உடந்தையானவர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவேன்- என்றார். (202-70-218)

# மல்லாகம் கனிஷ்ட மகா வித்தியாலயத்துக்கு சிவத்தமிழ்ச் செல்வியின் பெயரைச் சூட்டக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயத்துக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெயரைச் சூட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் கூடி இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளனர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் இக் கோரிக்கை அனுப்பப்பட்டது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது ஆரம்பக் கல்வியை இந்த வித்தியாலயத்திலேயே பயின்று சர்வதேச மட்டத்தில் பிரசித்தி பெற்றுச் செயலாற்றிப் பல பெருமைகளைப் பெற்றவர். அவருக்கு மதிப்பளித்து அவருடைய பெயரை வித்தியாலயத்துக்குச் சூட்ட வேண்டும்-என்றுகேட்கப்பட்டுள்ளது. (அ-1)

# போதனா வைத்தியசாலை வேளாங்கன்னி மாதா திருவிழா

யாழ்ப்பாணம் செப் 26.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னையின் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

நாளை சனிக்கிழமை குணமாக்கல் வழிபாடும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். (60)

# வேலணை பிரதேச அபிவிருத்திக்கு ஸ்ரீகாந்தா எம்.பி. நிதி ஒதுக்கீடு

நல்லூர் செப். 26

வேலணை பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீகாந்தா 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் மலசல கூடம் அமைக்க ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானப் புனரமைப்பிற்கு 2 இலட்சம் ரூபாவும்-

நயினாதீவு மகாவித்தியாலய வீதி அமைப்புக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவும்-

வேலணை கிழக்கு உதயமகால் சனசமூக நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் -

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும்-

வேலணை துறையூர் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும், வேலணை செட்டிபுலம் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும், மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-111)

# நவீன சந்தைக் கட்டடப் பணிகள் இரு கட்டங்களாக முன்னெடுக்கப்படும்

வடமராட்சி, செப்.26

பருத்தித்துறை நகரில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நவீன சந்தைக்கான கட்டடப் பணிகள் இரு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இச்சந்தைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை 160 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாடிக் கட்டடந்தைக் கொண்ட இந்த நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் கீழ்த்தள வேலைகள் 107 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்படும். இதற்கான நிதியை 'நெக்டெப்' நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து பருத்தித்துறை பஸ்நிலையம் தற்காலிகமாக சிவன்கோவிலுக்கு அருகாமையில் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-236)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 11 | 27.09.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி பிற்பகல். 02.51வரை |
| நட்சத்திரம் : | மகம் [illegible] 09.40வரை |
| [illegible] : | 03.02-04.32 |
| ராகுகாலம் : | 09.02 -10.2 |

# யாழ் கல்வி வலயத்தின் சைவ நெறிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு வலய மட்ட சைவ நெறிப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவி த்துள்ளார்.

கோட்ட மட்டப் போட்டிகளை கோட்ட ரீதியாக நடத்தி மாணவர்களது விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளன ர்.

நல்லூர் கோட்ட மட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ். கோட்ட மட்டப் போட்டிகள் நாளை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (302-60)

# இலங்கை வங்கியின் முகாமைத்துவப் பயிலுனர் பரீட்சை யாழ்ப்பாணத்திலேயே

யாழ்ப்பாணம் செப் 26

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுனர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு இங்கேயே பரீட்சையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பரீட்சை நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில்176 பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

மேலதிக விவரங்களை வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணத்துடன் 021 222 2735, 021 222 3126 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



கொக்குவில், கோணாவளை வீதியை சேர்ந்த பவநாதன் சற்சொரூபினி தம்பதியரின் (நாதன் புடைவையகம், திருநெல்வேலி) செல்வப்புதல்வி தருணிகா இன்று (26.09.2008) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மப்பா, அம்மம்மா, சித்தா (சத்தியா), மாமா (தயா) குடும்பம் மற்றும் பிரான்ஸிலுள்ள பெரியம்மா (சதா) குடும்பம், நோர்வேயிலுள்ள சித்தா (தயாழினி) குடும்பம் ஆகியோர் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் துணையுடனும் கோணாவளை ஞானவைரவர் துணையுடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஆனைப்பந்தி. சு.இராசையா (அம்மப்பா).




# நான்காவது பிறந்த நாள் வாழ்த்து

## 26.09.2008




சிவராமன் (சிவம்) நிவேதினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**சந்தோஷ்**

இன்று (26.09.2008) வெள்ளிக்கிழமை தனது நான்காவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை தூராவத்தை அன்னையின் ஆசியுடன் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ அப்பா, அம்மா, தம்பி யனுஜன் அப்பம்மா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் பெரியப்பாமார் (நந்தகோபன் குடும்பத்தினர், கிரி குடும்பத்தினர்), இத்தாலியில் வசிக்கும் சிவநேசன் குடும்பத்தினர், புத்தூர் பெரியப்பா, பெரியம்மா, தங்கவேல் குடும்பத்தினர், சிவரூபன் குடும்பத்தினர், நரேந்திரன் (H.N.B) மாமாமார், மாமிமார், அத்தைமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

தகவல்:
சிவம் (அப்பா).
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள யா/சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் வசிக்கும் **நெல்சன் வினி** தம்பதியினரின் புதல்வனுமாகிய **நெல்சன் ஹசன் (கண்ணன்)**

அவர்களை கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மாமா (டினோஜன்)
குடும்பத்தினர்.

(78748)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008 ஆம் ஆண்டு 5ஆம் தர. புலமைப் பரிசில் பரீட்சையில் 131 புள்ளிகளைப் பெற்ற
**செல்வன் சண்முகநாதன் நிலக்ஷன்**
(யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை)

அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேன்மேலும் உயர ஏழாலை மேற்கு கருணாகர விநாயகரை வேண்டி நிற்பதுடன், அவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கவிதா ரீச்சர் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்
A/V Dr. சிற்றம்பலம் குடும்பத்தினர்,
ஏழாலை தெற்கு,

224/6 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(78751)

# கண்டி றோட்டறிக் கழகம் யாழ்.மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப்.26

யாழ். மாவட் டத்திலுள்ள வறிய மாணவர்கள் 7 பேருக்கு கல்வி உதவியாக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

சுவீடனிலுள்ள றோட்டறிக்கழகம் கண்டி நகர றோட்டரிக் கழகத்தினூடாக இந்த உத வியை வழங்கியுள்ளது.

தகுதியான மாணவர்களின் விவரங் களை யாழ். நகர் மைய றோட்டரக் கழகம் பரிந்துரை செய்தது. (202)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.26

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை யின் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (202)

## புல் வெட்டும் இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு புல் வெட்டும் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மீசாலையைச் சேர்ந்த கயிலாய பிள்ளை நாகேஸ்வரி என்பவர் தனது தாயாரின் நினை வாக புல் வெட்டும் இயந்திரம் உட்பட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளார். (202-207)

## சமயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.26

யாழ். கல்விக் கோட்டப் பாட சாலைகளின் மாண வர்களுக்கான சமயப் போட்டிகள் நாளை நடைபெற வுள்ளது.

எழுத்துப் பரீட் சைகள் வண்ணை நாவலர் மகா வித்தி யாலயத்திலும் ஏனைய போட்டி கள் யாழ். வைத் தீஸ்வராக் கல்லூரி யிலும் நடை பெற ஏற்பாடாகி உள் ளன. (202)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் (A\L 2009) கலைப்பிரிவில் கல்வி பயிலும்
**செல்வன் ந.தினேஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
**நாகன் நவரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலை வர்த்தகக் கல்லூரி,
ஆசிரியர் வீதி, பெரியரசடி,
சாவகச்சேரி.

நிர்வாகி,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**வனஜலோஜினி வேலாயுதபிள்ளை**
(பபா)

தோற்றம் 19.12.1940
மறைவு 26.09.2007

கடந்து போன உங்கள் வாழ்க்கையை
நடந்து நாங்கள் பார்க்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
கும்பிழாவளையானை வேண்டுகிறோம்!

"திருவதிகை"
வேளாவை, அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(78739)



அளவெட்டி வடக்கு
# முத்துமாரிஅம்மன் ஆலய
## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் பரிபாலனசபை/ நிர் வாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய் வதற்கான பொதுச்சபை அங்கத்தவர்களது கூட்ட மொன்று எதிர்வரும் புரட்டாதி மாதம் 26ஆம் திகதி (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணியளவில் சபைத் தலைவர் க.சின் னத்தம்பி அவர்களது தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற அம்பாள் திருவருள் பாலித்துள்ளார்.

அத்தருணம் சகல பொதுச்சபை அங்கத்தவர் களும் கூட்டத்திற்குத் தவறாது பங்குபற்றி புதிய நிர்வாகமொன்றினைத் தெரிவு செய்ய ஒத்து ழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுச்சபை அங்கத்துவமுடையோர் செயலா ளருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிசெய்து கொள்ளவும்.

பரிபாலன/ நிர்வாகசபையினர்,
தவளக்கிரி.

(78727)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 . 10 . 1948



மறைவு
17 . 09 . 1998

## திருமதி சாரதாதேவி மகேந்திரன்

திதி:துவாதசி [26.09.2008]

அன்பாகப் பேசி பண்பாக வாழ்ந்த - எம் குலவிளக்கே
எம்மை விட்டுப் பிரிந்து பத்தாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவை மறக்க முடியவில்லை.
எங்கள் அன்பு அம்மாவின் ஆன்மா
அம்பாளின் பாதங்களில் அமைதி காணட்டும்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில்.

கணவர்,
பிள்ளைகள்.

(சி/554825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணுத் திட்டங்களுக்கு சீனா ஒத்துழைப்பு நல்கும்

நியூயோர்க், செப். 26

அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதில் இந்தியாவுடன் ஒன்றிணைந்து செயற்பட சீனா முடிவு செய்துள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், சீனப்பிரதமர் வென் - ஜியா - பாவும் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேசியபோதே இந்த முக்கியமான முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் தங்கியிருந்த வால்டாஃர்ப் ஹோட்டலில் இச்சந்திப்பு நடந்தது. ஆசியாக் கண்டத்தின் வளர்ந்துவரும் இரு வல்லரசு நாடுகளின் தலைவர்களின் இச்சந்திப்பு மிகவும் சுமுகமாகவும், பயனுள்ளதாகவும், இருதரப்பு உறவை வலுப் படுத்துவதாகவும் அமைந்தது.

இரு நாடுகளுக்கும் இடையில் பல ஆண்டுகளாகத் தீர்க்கப் படாமல் தொடரும் எல்லைப் பிரச்சினையைப் பேச்சு வாயிலாகவே தீர்த்துக்கொள்வது என்ற முடிவை இரு தலைவர்களும் உறுதி செய்தனர். இரு நாடுகளின், பிரதிநிதிகள் இடையே இப்போது நடைபெற்றுவரும் பேச்சுக் குறித்து இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர்.

இந்தியாவுக்குத் தேவைப்படும் அணுசக்தித் தயாரிப்புக்கான மூலப்பொருள்களை வழங்கக்கூடிய என்.எஸ்.ஜி. நாடுகளின் கூட்டம் இந்த மாதத் தொடக்கத்தில் வியன்னாவில் நடந்தது. அப்போது அதில் கலந்துகொண்ட சீனா எழுப்பிய சில கேள்விகள், இந்தியாவுக்கு மூலப்பொருள்கள் கிடைப்பதை அது தடை செய்யுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகளில் ஒருவகைப் பதற்றம் கூட ஏற்பட்டது. அதன்பிறகு இந்தியாவுக்குச் சாதமான முடிவு அக்கூட்டத்தில் ஏற்பட்டதால் அந்தப் பதற்றம் மறைந்துவிட்டது.

இந்நிலையில் நியூயோர்க்கில் நடைபெற்ற சந்திப்பில் சீனத் தரப்பு ஒரு படி மேலே போய், இந்தியாவின் அணு மின்சக்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்கவும் முன்வந்திருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான நில எல்லையை வரையறுப்பது சிக்கலான வேலைதான் என்றாலும் இதைப் பேச்சு மூலமே தீர்த்துக் கொள்ளலாம் என்றும் பிரச்சினை தீரும் வரை காத்திருப்பது என்றில்லாமல், தொழில், வர்த்தக உறவுகளைப் படிப்படியாக வளர்த்துக்கொள்வது என்றும் இரு தலைவர்களும் தீர்மானித்தனர். (அ-ஓ)

# சோமாலியாவில் போர் தொடர்கிறது

மொகடிஷ்ஷு, செப்.26

சட்டம், ஒழுங்கு, இயல்பு நிலை ஆகியவை சீர்குலைந்துள்ள சோமாலியாவின் தலைநகரான மொகடிஷ்ஷுவில், ஆபிரிக்க ஒன்றிய அமைதி காக்கும் படைகளுக்கும், இஸ்லாமிய தீவிரவாதப் போராளிகளுக்கு மிடையிலான கடும் போர் நீடித்து வருகின்றது. இச்சண்டையை ஒட்டி ஆயிரக்கணக்கான நகரக் குடியிருப்பாளர்கள் நகரை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

தலைநகரில் திங்கட்கிழமை முதல் நடைபெற்றுவரும் இச்சண்டையால் வாகன போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. மக்களின் நடமாட்டம் குறைந்துவிட்டது. எங்கும் பீதியோடு கூடிய பதற்றம் நிலவுகிறது. இதுவரை 18 ஆயிரம் மக்கள் நகரைவிட்டு வெளியேறிவிட்டார்கள் என உள்ளூர் மனித உரிமைகள் இயக்கத் தொண்டர் ஒருவர் பி.பி சி.க்குத் தெரிவித்தார்.

மொகடிஷ்ஷுவில் கடந்த சில மாதங்களாக இடம் பெற்றுவந்த சண்டைகளில் தற்போதைய சண்டை மோசமானது. இச்சண்டையில் இதுவரை 82 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெருந்தொகையானோர் பெண்களும் பிள்ளைகளுமாவர். 67 பேர் காயமடைந்துள்ளனர் என மருத்துவமனை வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இஸ்லாமிய தீவிரவாதப் போராளிகள், ஒரு யுத்தப்படையோடு மோதுவதைப் போல, அமைதிகாக்கும் படையோடு மோதுகிறார்கள். இவர்களை தலைநகரிலிருந்து விரட்டியடிக்க, நாமும் கடுமையான ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என ஆபிரிக்க ஒன்றிய அமைதிப்படையினர் தெரிவித்துள்ளனர். (அ-ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மருதடி புத்தூர் வடக்கைச் சேர்ந்த சி. *அருமைக்கிளி-கீதாகினி* தம்பதிகளின் புதல்வனும், உடுவில் மகளிர் கல்லூரி மாணவனுமாகிய

**செல்வன் அ.ரவிவர்மன்**

அவர்களை கல்வியில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று, நோய் நொடி இன்றி பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் அவரது வெற்றிக்கு வித்திட்ட ஆசிரியர்கள், தாய், தந்தையரையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவ்வண்ணம்:
வளர்மதி சனசமூக நிலையம்,
வளர்மதி விளையாட்டுக்கழகம்,
வளர்மதி முன்பள்ளி, வளர்மதி மாதர் சங்கம்,
வேம்பாபுலம் ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை.

*சுன்னாகம் வீதி,*
*புத்தூர்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



மண்ணில் முத்தாக
08*10*1933

விண்ணில் முத்தொளியாக
27*08*2008

**திருமதி**
**முத்தம்மா சின்னத்துரை**

*மண்ணில் முத்தாக மாண்புறவே வந்துதித்தாய்*
*கண்ணின் மணியாக எம்மை வளர்தெடுத்தாய்*
*பண்பின் சிகரமாய் பவனியில் வலம் வந்தாய்*
*பண்புறவே பறவையாய் பறந்துவிட்டாயோ எமைவிட்டு*
*மறவோம் உன்னை எத்தனை ஜனனத்திலும்.*

என்றும் உன் முத்தான நினைவுகளுடன்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*மாசுவன் சந்தி,*
*நீர்வேலி மேற்கு,*
*நீர்வேலி.*

## சீனாவில் சூறாவளி; 18 பேர் பலி

கடும் மழையோடு கூடிய 'ஹேகுபிட்' என்னும் சூறாவளி தென் சீனாவைக் கடுமையாகத் தாக்கியது. இதன் அனர்த்தங்களுக்கு 18 பேர் பலியாயினர் என அரச ஊடகமான சின்குவா நேற்று வியாழக் கிழமை தெரிவித்தது.

தென் குயாங் டொங் மாகாணத்தில் சூறாவளி அனர்த்தங்களுக்கு எட்டுப் பேர் பலியாகியுள்ளனர். கடும் சூறாவளியால் வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. விருட்சங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளன. அடைமழையால் நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன என்றும் அது விவரித்தது.

சிசுவான் மாகாணத்தில் 10 பேர் இறந்துள்ளனர். 49 பேர் காணமற் போயுள்ளனர். கடும் மழையால் வெள்ளப் பெருக்கேற்பட்டுள்ளது. மலைப்பிராந்தியங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பிரதான நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இடைவிடாத அடைமழை தொடர்கிறது என்றும் சின்குவா குறிப்பிட்டது. (அ-ஓ)

## நேபாளத்தில் நில நடுக்கம்

காத்மண்டு, செப்.26

நேபாளத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன. குடியிருப்பாளர்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி ஓடினார்கள்.

தலைநகரான காத்மண்டிலிருந்து, 400 கிலோ மீற்றர் தொலைவில், பூமிக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்நில நடுக்கம் மையங் கொண்டிருந்தது. இதன் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது.

பொருளியற் கல்லூரி, யாழ்.
Accounting
கம்பனி
A/L 2009
சனி- ஞாயிறு
10-11.30
ஆரம்பம்-
27.09.2008
By B.Muguthan
B.B.A (Hons)
Note:-

## துயர் பகிர்கின்றோம்



**கணபதிப்பிள்ளை குலசேகரம்**

(முன்னாள் கிராம உத்தியோகத்தர் தரம்-1, வலிமேற்கு பிரதேச செயலகம், சங்கானை)

வலி.மேற்கு பிரதேசசெயலகத்தில் எமது சக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய அமரர் க.குலசேகரம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்கள்,
வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை.

*பிரதேச செயலகம்,*
*சங்கானை.*

# மரண அறிவித்தல்கள்

## *பொன்னையா குணசேகரம் (பாஸ்கரன்)*

நாவற்குழி வடக்கு, செல்வநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா குணசேகரம் (பாஸ்கரன்) 23.09.2008 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கமலம் தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லர்- -செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், டசிந்தா, டசீபன், டருளன், லயந்தா, டுவாரதா ஆகியோரின் அருமைத் தந்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09. 2008) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொ.பே.0602217179*

தகவல்:
குடும்பத்தினர்

## *பொன்னையா செல்வராசா*



வசாவிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்வராசா (24.09.2008) புதன் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல்லக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும், கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் முத்துமாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரவேலு (இ.போ.ச., நேரக்கணிப்பாளர்) தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், அனுசியா, ராசன், தாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகராசாவின் அன்புச் சகோதரனும், ஏஞ்சலினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.09.2008 ஞாயிற்றுக் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகராசா (தம்பி)
குடும்பத்தினர்.

## *செல்வரட்ணம் திருச்செல்வம் (சாரதி)*



நீலிப்பந்தனை, காரைநகரை பிறப்பிடமாகவும் 327/7, கதீற்றல் லேன், சென்.பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் திருச்செல்வம் நேற்று(25.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் செல்வரட்ணம் மற்றும் வள்ளியம்மை (பிரான்ஸ்) தம்பதியினரின் அன்புப் புதல்வனும், தர்மவதியின் அன்புக் கணவரும், சுதாகரன், சுதர்சினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செல்வி திருவள்ளுவர் (பிரான்ஸ்), திருப்பதி(உரிமையாளர், திருநெல்வேலி P.S.T. ஸ்ரோர்ஸ் ), தவமணி(பிரான்ஸ்), திருச்சிற்றம்பலம்(பிரான்ஸ்), திருவருட்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2008) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.திருப்பதி(சகோதரன்)
P.S.T. ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி.

*சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## *திருமதி இரங்கநாதன் நிவேதராணி*

*(ஆசிரியை, யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)*

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரங்கநாதன் நிவேதராணி நேற்று (25.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசிரியர் ரங்கநாதனின் அன்பு மனைவியும், தர்மிகாசினி, நிர்ஜிகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நாகபூசணி மற்றும் நாகேஸ்வரிஅம்மா, சிவகுமார், சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம், கதிர்காமநாதன், கயிலாயநாதன், ஜெகநாதன், பாக்கியநாதன், ராஜேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானபாஸ்கரோதய சங்க வீதி,*
*மூன்றாம் கட்டை,*
*கல்வியங்காடு*

தகவல்:
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கலை இலக்கியப்பெருவிழா சனி, ஞாயிறு இளங்கலைஞர் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், செப். 26

நல்லூர் பிரதேச செயலக கலாச்சாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா 2008 நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற இருக்கின்றது. இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் மூன்று அமர்வுகளாக நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பல்வேறு வகைக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன.

நாளை சனிக்கிழமை,பி.ப 1.30 மணிக்கு முதலாவது அமர்வு "ஏரம்பு சுப்பையா அரங்கில்" நடைபெற உள்ளது. பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்புவிருந்தினர்களாக, யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கௌரவ விருந்தினராக ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கோண்டாவில், சி.கல்யாணசுந்தரம் குழுவினரின் மங்கள இசை, ஆசியுரைகளை தொடர்ந்து செல்வி.தனசொரூபி நவரெத்தினத்தின் இசையரங்கு, கவிஞர் சோ.இ.பத்மநாதன் தலைமையில் "இழந்தனவும் இழப்பனவும்" எனும் தலைப்பில் கவியரங்கும், சுதாவேல்மாறன் குழுவினரின் கூட்டிசை விருந்தும், கனகரத்தினம் ம.ம.வி.மாணவர்களின் "மாலையிட்டாள் மணாளனுக்கே" நாட்டிய நாடகமும், அண்ணாவியார் மு.அருட்பிரகாசம் நெறியாள்கையில் "மாவீரன் சங்கிலியன்" தென்மோடி நாட்டுக் கூத்தும், நடைபெறவுள்ளன. இந்த அமர்வில் தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8:30மணிக்கு விமலா யோகநாதன் அரங்கு இரண்டாவது அரங்காக நடைபெறும். நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பிரதம விருந்தினராகவும், இராமநாதன் நுண்கலைபீட இசைத்துறைத் தலைவர் செல்வி.பாக்கியலட்சுமி நடராஜா சிறப்பு விருந்தினராகவும், செல்வி புஸ்பா செல்வநாயகம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரின் மாணவிகளின் வாத்திய பிருந்தா "நாளைய தலைமுறையை ஒளிமயமாக்க அவசியமானது எது" என்ற தலைப்பில் பட்டிமன்றம், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனம், கொக்குவில் இந்துக்கல்லூரி மாண வர்களின் ஒயிலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இந்த அமர்வில் இடம்பெறவுள்ளன.

அன்று மாலை 1.30மணிக்கு மூன்றாவது அரங்காக "சிவஞானசுந்தரம்(நந்தி) அரங்கு" நடைபெறும்- நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா சிறப்பு விருந்தினராகவும் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

தொடர்ந்து செஞ்சொற் செல்வர் ஆறு. திரு முருகனின் "இருபத்தொராம் நூற்றாண்டில் தமிழர் பண்பாடு" எனும் தலைப்பிலான சிறப்புரை, கொக்குவில் கலாபவனம் வழங்கும் "நிருந்திய வந்தனம்" எனும் நாட்டிய நிகழ்ச்சி செயற்திறன் அரங்க இயக்கம் அளிக்கும் "சொர்க்கத்தின் குழந் தைகள்" நாடகமும் இடம் பெறவுள்ளன. (அ-149)

## மண்கும்பானில் சூட்டுக்கு ஒருவர் பலி

யாழ்ப்பாணம், செப்.26

மண்கும்பான் பகுதியில் நேற்றிரவு 11 மணியளவில் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் நள்ளிரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளை வீதியில் நடமாடிய போது அவர் சுடப்பட்டார் எனக் கூறப்பட்டது. (1-78)

## அக்கராயன்குளத்தில் குண்டுவீச்சு

கிளிநொச்சி அக்கராயன்குளம் வடக்குப் பிரதேசத்திலுள்ள புலிகள் ஒன்று கூடும் இடத்தின் மீது நேற்று பிற்பகல் 2.20 மணியளவில் அரச விமானப்படை விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்திருக்கிறது.

இத்தாக்குதலினால் பெருந்தொகையான விடுதலை புலி உறுப்பினர்கள் காயமடைந்திருப்பதனை விமானிகள் உறுதிப் படுத்தியுள்ளனர் எனவும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடாநாட்டிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு செல்வதற்குத் தேவையான படைத்தரப்பினர் வழங்கும் பயண அனுமதி (கிளியரன்ஸ்) பெரும் சிரமமாகி வருவதாலும் -

பயண அனுமதியுடன் சென்றாலும் கொழும்பில் பொலிஸில் பதிவு செய்வதில் கெடுபிடிகள் நிலவுவதாலுமே -

கொழும்பு செல்லும் மக்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சமகால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மேலிடத்து உத்தரவுக்கு அமைவாகவே கொழும்பு செல்வோரின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுவதாக மக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

அவசர வைத்திய சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகள், நேர்முகப்பரீட்சைக்கு கொழும்புக்குச் செல்லும் பரீட்சார்த்திகள் மற்றும் கொழும்பிலும் சுற்றாடல் பகுதியிலும் உள்ள கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கச் செல்பவர்களுக்கு மட்டுமே இப்போது பயண அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (அ-302)

## வன்னி மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியநாடுகளுக்கான அமெரிக்கத் தூதுக்குழுவின் அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பில் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அதன்போதே வன்னியின் மனிதாபிமான நெருக்கடி நிலைமை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் இந்தச் சந்திப்பின் பின்னர் இது குறித்து அறிக்கை வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் முழு நிலைமை குறித்தும் நாங்கள் இரண்டரை மணித்தியாலங்களாக முழுமையாக ஆராய்ந்தோம். மாறுபட்ட கருத்துகளைப் பரிமாறிக்கொண்டோம். இலங்கை மக்களின் குறுகிய கால, நீண்டகாலத் தேவைகள் பற்றியும் ஆராய்ந்தோம்.

எனினும் உடனடி மனிதாபிமானக் கரிசனைகள் குறித்த ஒரு விடயத்தை நாங்கள் அனைவரும் வற்புறுத்தினோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இது பல விடயங்கள் சம்பந்தப்பட்டது.

மோதல் விரிவடைந்து வடபகுதி நோக்கிச் செல்கின்றது. மோதலில் சிக்கியுள்ள மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயம் குறித்தும், தாங்கள் கைப்பற்றிய இடங்களில் உள்ள பொதுமக்களின் உரிமைகளை மதித்து அவற்றை உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளமை பற்றியும் நாங்கள் தற்போது முக்கியமாக வற்புறுத்துகின்றோம்.

இரண்டாவது விடயம் மோதல் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைதல்.

### விடுதலைப்புலிகளுடனும் தொடர்பு

இரு தரப்பும் தாங்கள் பொதுமக்களை மோதலின் நடுவில் சிக்கச்செய்யாததை உறுதிசெய்யவேண்டும், பொதுமக்கள் தாங்கள் பாதுகாப்பாக இருக்கலாம் எனக் கருதும் இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவேண்டும்.

மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிக்க முயலும் ஐக்கியநாடுகளுக்கும் மனிதாபிமானப் பணியாளர்களுக்கும் எமது உறுதியான ஆதரவுள்ளது.

தாங்கள் கைப்பற்றும் பகுதிகளிலுள்ள மக்களின் மனித உரிமைகளை மதிக்க வேண்டிய - உறுதிசெய்யவேண்டிய - கடப்பாடு அரசுக்கு உள்ளதையும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை இரு தரப்புகளும் உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் இணைத்தலைமை நாடுகள் ஆராய்ந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இலங்கை அதிகாரிகளுக்கும் கொழும்பிலுள்ளவர்களுக்கும் இது குறித்து எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு இணைத்தலைமை நாடுகளின் சில பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் ரிச்சட் பௌச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## கிளாலி, நாகர்கோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

முகமாலையில் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரால் இச்சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-01-25-78)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு வெளியிட் டுள்ள தனது வாராந்த அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி நகரின் அநேகமான பொதுமக்கள் இடம்பெயர்ந்துவிட்டனர் எனவும் தெரிவித்துள்ள மனிதாபிமான அமைப்புகள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்துள்ளதன் காரணமாக கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் விமானக் குண்டு வீச்சும்,ஷெல் தாக்குதலும், சிறு ஆயுத பிரயோகமும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக கிளிநொச்சி நகரில் அநேகமான பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி நகரில் தங்கியிருந்த மக்களும் வெளியேறிவிட்டனர்.

வன்னியில் பணியாற்றிய மனிதாபிமான அமைப்புகள் வெளியேறும் நடவடிக்கைகள் 16ஆம் திகதி முடிவடைந்தன. 21 வாகனங்களில் 42 மனிதாபிமானப் பணியாளர்கள் வெளியேறினர். படிப்படியாக வெளியேறுவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்ததன் காரணமாக அது சாத்தியமாகவில்லை.

பொதுமக்கள் குழுவொன்று மூன்று நாள்களாக வாகனத் தொடரணியைத் தடுத்து வைத்திருந்ததுடன் மனிதாபிமானப் பணியாளர்கள் வெளியேறுவதால் தமது நிலைமை மேலும் மோசமடையும் என்ற கவலையையும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

### மனிதாபிமானப் பணியாளர் 500 பேர் வன்னியில்

விடுதலைப் புலிகள் போக்குவரத்து அனுமதி வழங்காததாலும் தமது குடும்பங்களுடன் தங்கியிருக்க விரும்பியதாலும் 500 இற்கும் மேற்பட்ட மனிதாபிமான பணியாளர்கள் வன்னியிலேயே தங்கிவிட்டனர். இவர்களில் ஐக்கிய நாடுகளின் 21 பணியாளர்களும் உள்ளனர்.

விமான மற்றும் ஷெல் தாக்குதல் குறித்த அச்சம் காரணமாக மக்கள் தொடர்ந்தும் முல்லைத்தீவு நோக்கி சென்ற வண்ணமுள்ளனர். கனகாம்பிகைக் குளம், இரணைமடு சந்தி ஆகிய பகுதிகளின் மக்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டனர்.

வன்னியில் 2 லட்சம் மக்கள் ஆபத்தான நிலையிலுள்ளனர். அவர்களுக்குமேலும் உதவிகள் அவசியம். வவுனியாவிலுள்ள அதிகாரிகள் நிவாரண விநியோகத்தை ஒருங்கிணைப்பதற்கான நிலையமொன்று ஓமந்தையில் ஏற்படுத்தப்படும் என அறிவித்துள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிவது கிளிநொச்சியிலா அல்லது கொழும்பிலா என்பது முழு உலகிற்கும் தெரியவரும் - என்றார் இராணுவத் தளபதி.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய விமானப் படைத்தளபதி ஏயார் வைஸ் மார்சல் றொஹான் குணதிலக தெரிவித்தவை வருமாறு:-

வன்னிப் பகுதிக்குள் இராணுவ நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் விமானப் படையினருக்கு புலிகளின் தலைவர்கள் நடமாட்டம் பற்றிய தகவல்கள் பெருமளவில் கிடைக்கின்றன.

இதனால், விரைவில் அவர்கள் விமானப் படையின் தாக்குதல்களுக்கு இலக்காவார்கள் - என்றார். (அ-சி)

## ஊரெழு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் விடுதலைப்புலி கள் ஊடுருவியுள்ளதாக வெளிவந்த தகவல் குறித்துக் கேட்ட போது, அதை அவர் முற்றாக மறுத்தார். (அ-1)

## யாழ்.உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க யாழ். பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

தேர்தல் செயற்பாடுகளை மறுசீரமைப்பது தொடர்பான மாநாடு ஒன்று தேர்தல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் உட்பட சகல மாவட்டங்களினதும் தேர்தல் பிரதி ஆணையாளர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை இவ் வருடம் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் நடத்தி முடிக்க ஏற்ற வகையில் அதற்கான ஆயத்தங்களை செய்யுமாறு யாழ். தேர்தல் பிரதி ஆணையாளர் எஸ். குகநாதன் தேர்தல் ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டார்.

நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அடுத்த வருடம் எந்த நேரத்திலும் நடைபெறலாம் என்றும் அதற்குத் தயாராக வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவுறுத்தியுள்ள தாகத் தெரியவந்தது.

இதே வேளை ஜனாதிபதித் தேர்தல்2009ஆம்ஆண்டு நவம்பருக்கு முன்னர் நடத்தப்பட மாட்டாது என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார் என்றும் அறியப்படுகிறது. (அ-1)


இது தூள் மாமு!

| MS 01 | MS 02 |
|---|---|
| 1.6 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>15" Monitor<br>42,300/= | 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>15" Monitor<br>49,500/= |

| MS 03 | MS 04 |
|---|---|
| 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>17" Monitor<br>53,500/= | 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>17" LCD Monitor<br>60,000/= |

MARSHA SYSTEMS (Pvt) LTD
NO-74, Kannathiddy Road, Jaffna
T.P- 021 222 9418



பிரத்தியேக வகுப்புக்கள்
Philosophy
G.A.Q,Part-I, B.A.Fin
Logic
A/L - 2009, 2010
ஆசிரியர்:-
N.உதயகுமார்
(B.A(Hons), Phil.sp)
இடம்:- 46/11,
ஆசிர்வாதப்பர் வீதி,



விக்னா
கல்வி நிறுவனம்
கணக்கீடு
திரு.P.பகீரதன்
A/L 2009
சொத்து விற்பனை
Sat.Sun.9-10.A.M
PAPER CLASS
S.L.A.S.S
Sat.Sun.10-11.A.M
ஆரம்பம்:-27.09.2008
(Sat)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.